Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற் பெட்டி எண் 49

மலர் 5 | யாழ்ப்பாணம் | சுபகிருது | பங்குனி 27 ஆம் நாள் | துல்கஃதா 14 | (9 4-63) | செவ்வாய்க்கிழமை | இதழ் 60

தமிழ் தந்திகளுடன் தமிழியக்கம் ஆரம்பம்

17-ம்திகதிநோடிநடவடிக்கைஇல்லை ஆனல் விரைவில் தொடங்கும்

— சமஷ்டிக் கட்சித் தலைவர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மன்னர் மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டு கிளிநொச்சி செயற்குழுக் கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்ட நேரடி நடவடிக்கை இம்மாதம் 17-ம் திகதி ஆரம்பிக் கப்படமாட்டாதென தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி.யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் 'ஈழநாடு' நிருபருக்களித்த போட்டியொ ன்றில் கூறினர். ஆனல்நேரடி நடவடிக்கைப் போராட்டம் காலதாமதமின்றி நடை பெறுமெனத் தாம் எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

முன்னேடியான நடவடிக்கை

தமிழ் இயக்க வாரம் நேரடி நடவடிக்கையின் பூர்வாங்க மான செயலாகக்கருதப்படும். தமிழியக்க வார நடவடிக்கை கள் இலங்கையில் தமிழ் பே சும் மக்கள் வசிக்கும் ஒவ் வொரு இடங்களிலும் விஸ்த ரிக்கப்படும். வடகரு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமேதமிழ் இயக்கவார நடவடிக்கைகளில் தொண்டர்கள் நேரடியாக ஈடுபடுவர். மலேநாட்டிலும் கொழும்பிலும் உள்ள தமிழ் மக்கள் தமது அலுவல்களேத் தமிழிலேயே செய்யும்படி கேட் க்டு கொள்ளப்பட்டுள்ளார் கள்.

சென்ற வருடம் மன்னர் மகாநாட்டில் நிறைவேற்றப் பட்ட நேரடி நடவடிக்கைத் திட்டம் இம் மாதம் 17-ம் திகதி ஆரம்பிக்கப்படமாட் டாது. எனத் தான் எதிர் பார்ப்பதாகக் கூறிய திரு. இராசமாணிக்கம் வவனியா வில் கூடிய பொதுக் கூட்ட த்தில் நிறைவேற்றிய தீர்மா னத்தை தெரிவித்தார். நேரடி நடவடிக்கைக்குழு எதிர்பார்க் கப்பட்டபடி இம்மாதம் 17-ம் திகதி போராட்டம் ஆரம் பிக்கப்படாதாயினும் மிகவிரை வில் போராட்டம் ஆரம்பிக்கப் படுமெனத் தான் எதிர் பார் ப்பதாகவும் குறிப்பிட்டார்.

பிரதமர் கூட்டிய மகாநாடு

சமீபத்தில் பிரதம மந்திரி யுடன் தமிழ் எம். பி. க்கள் நடாத்திய தமிழ்மொழி மகாநாடு பற்றிக் கேட்கப் பட்டபோது அவர் கூறிய தாவது:-

பிரதம மந்திரி சில தமிழ் எம். பிக்களுடன் சமீபத்தில் பேச்சு நடத்தியதாகச் செய் திகள் கூறுகின்றன. கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி யினரோடு பிரதம மந்திரியின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சியினர் பேச்சுக்கள் நடத்தினர். அப்பேச்சுவார்த் தைகளின் மூலம் எவ்வித பய னும் நமக்கு கிடைக் கவில்லே. எனவே இப்பிரதிநிதிகள் எடுக்கும் முயற்சியினுல் எவ்வளவுதூரம் எமது பிரச்சினேகள் தீர்க்கப் படுமன்று நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்பக்கவாரம் சம்பந்த மாக திரு. இராசமாணிக்கம் குறிப்பிட்டதாவது:

எல்லாம் தமிழ் இயக்க வாரம் தொடர்ந்து நடை பெற்றுவரும். தமிழ் இயக்கம் நேரடி நடவடிக்கைக்கு முன் னேடியானது. எல்லாம் தமிழ் இயக்கத்தை நேற்று யாழ்ப் பாணம் பிரதம தபாற்கந்தோ ரில் வெற்றிகரமாக ஆரம் பித்து வைத்துள்ளோம். தமிழ் மொழி மூலம் தம்முடைய நட வடிக்கைகளே எல்லாம் தமிழ் மக்கள் நடத்த வேண் டும். நமது வேண்டுகோளுக்கு மக்களிடமிருந்து நல்லாதரவு கிடைத்துள்ளது. இயக்கத தைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லா அரசாங்க காரியால யங்களிலும் நடத்த மக்களின் ஆதரவு வேண்டுமென்று தெரி வித்துள்ளோம் யாழ்ப்பாணம் பெரிய தபாற் கந்தோரிற் கூட சில படிவங்கள் தமிழில் இல் லாமை வருந்தத்தக்கது. உட னடியாக இதனே நீக்கும்படி தபால் தகவல் அமைச்சரைக் கேட்டுள்ளோம். தொடர்ந்து அமைதியாக எல்லாம் தமிழ் இயக்கத்தை நடத்துவதற்கு தமிழ்மக்கள் முன்வருவதுடன் தமது எல்லாத் தொடர்புகளை யும் தமிழிலேயே செய்வோம் என்று அனேவரும் உறுதி பூண வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நான் உறுதியாகச் சொல்லக் கூடி யது என்னவெனில் உத்தேச நேரடி நடவடிக்கை 17-ந்

(5-ம் பக்கம் பார்க்க)

முதல் தந்தி எஸ். ஜே. வி.க்கு மந்திரிகளுக்கும் இராசமாணிக்கம் தந்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிரசுக் கட்சியின் 'எல்லாம் தமிழ்இயக்கம்' நேற்று யாழ்ப்பாணம் தபால் நிலையத்திலிருந்து திரு. செல்வநாயகத்துக்கு தமிழில் ஒருதந்தி அனுப் பப்பட்டதுடன் ஆரம்பமானது. 'யாழ்ப்பாணத் தில் எல்லாம் தமிழியக்கம் ஆரம்பமாகிவிட் டது' என்ற தமிழ்த் தந்தியை தமிழரசுக் கட் சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி. யுமான திரு. எஸ்.எம். இராசமாணிக்கம் திரு. செல்வ நாயகத்துக்கு அனுப்பிவைத்தார்.

யாழ்ப்பாணம் தபால் நிலே யத்தின் முன் 'எல்லாம் தமிழ் இயக்கத்தை திரு. இராச மாணிக்கம், சென்ட்டர் ஜி. நல் லேயா, தமிழரசு வாலிப முன் னணித் தலைவர் திரு. கதிர வேற்பிள்ளே ஆகியோர் ஆரம் பித்துவைத்தனர்.

திரு. இராசமாணிக்கத்தைத் தொடர்ந்து சென்ட்டர் நல் லேயா, மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராசதுரைக்கு தமிழில் ஒரு தந்தியும், திரு. கதிரவேற்பிள்ளே தமிழில் விலாசமிடப்பட்ட அட்டையு டன் திரு. செல்வநாயகத்திற்கு ஒரு கடிதமும் அனுப்பினர்.

இதன் பின் பல இளேஞர் கள் தமிழ் விலாசமிடப்பட்ட கடிதங்களே அனுப்பினர்.

மந்திரிகளுக்கு தமிழில் தந்தி

தமிழ் பகுதியிலுள்ள யாழ்ப் பாணத் தபால் நிலேயத்தில் தமிழ்ப் படிவங்கள் பல இல்லேயெனவும் அவற்றை உடனடியாக அனுப்பும்படியும் தபால் மந்திரிக்கு ஒரு தந்தி யும் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் நாளே காலே கல்லோயா சபைத் தலைவரை பேட்டி காண்பதாக விருந்து ஒழுங் குப்படி வரமுடியவில்லேயென அவருக்கு ஒரு தந்தியும் தும் பன்கேணி, பதுக்காமுனே வாய்க்கால் வேலேகளேயும் ஏனேய பிரச்சினேகளேயும் அவரோடு கலந்து ஆலோசித்து இவ்வருடம் ஆவணிக்குள் ஒதுக்கப்பட்ட எட்டு லட்சம்ரூபாய் வேலேயை முடிக்கக் கூடிய ஒழுங்குகள் செய்யும்படிமட்டக்களப்பு ரஅ சாங்க அதிபரைக் கேட்டுக் கொண்டு அவருக்கு ஒரு தந் தியும், மந்திரிகள் ஒவ்வொ ருவருக்கும் அவரவர் கீழுள்ள இலாக்காக்கள் மூலம் தமது தொகுதிக்குச் செய்யும் வேலே களேச் செய்யும்படி கேட்டுக் கொள்ளும் தந்திகளேயும் திரு. இராசமாணிக்கம் தமிழில் அனுப்பிவைத்தார்.

உதவி நிதிமந்திரி ராஜினமா செய்வார்?

கொழும்பு, திங்கள்

நிதி அமைச்சரின் பார்லி மெண்டரிக் காரியதரிசி திரு. ஆர். எஸ். வி. போலியர், பதவியிலிருந்து விலகுவதற்கு தனக்கு அனுமதி அளிக்குமாறு பிரதம மந்திரிக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் கேட்டுள் ளார்.

திரு. போலியார் தனது பதவியிலிருந்து விலகுவதற்கு பிரதம மந்திரியின் அனுமதி யைக் கோரியிருந்தபோதிலும் தக்க காலம் வரும் வரையில் பார்லிமெண்டரிக் காரியதரிசிப் பதவியில் தொடர்ந்து சேவை யாற்றும்படி அரைப் பிரத மர் கேட்டுள்ளதாக நம்பக வட்டாரங்களிலிருந்து தெரிய கிவருறது.

திரு. போலியர் தேகநலக் குறைவினுலேயே இப்பதவி யிலிருந்து விலக விரும்புவ தாக நம்பப்படுகிறது. அவ ருக்கு இப்போழுது 69 வயது. நிதி அமைச்சரின் பார்லிமெண்டரிக் காரியதரிசிப் பதவியிலிருந்து ஜோர்ஜ் ராஜ பக்ச ராஜினுமாச் செய்ததைத் தொடர்ந்து சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் திரு. போலி யர் நியமிக்கப்பட்டார்.

——

புதுடில்லி, ஏப்ரல் 8

3-ம்ஐந்தாண்டுத்திட்டகால த்தில் 170 லட்சம் பேர்களுக்கு வேலேகிடைக்கும் என அறிவிக் கப்படுகிறது.

நேரடி நடவடிக்கை பொதுச் சபையின் தீர்மானம்

யாழ்ப்பணம், செவ்வாய்

வவனியாவில் கூடிய தமிழ ரசுக் கட்சியின் பொதுச் சபை நேரடி நடவடிக்கைக் குழுவிற்கு நேரடி நடவடிக்கை சம்பந்தமாக அதிகாரம் வழங் கும் தீர்மானமொன்றினே நிறைவேற்றியுள்ளது. இக்கூட்

(5ம் பக்கம் பார்க்க)

திருமலேயில் 20-ம் திகதி தமிழ் இயக்கம் ஆரம்பம்

திருக்கோணமலே, திங்கள்

தமிழரசுக் கட்சியின் 'எல் லாம் தமிழ் இயக்கம்' இன்று திருக்கோணமலேயில் ஆரம்பிக் கப்படவில்லே. இந்த இயக்கம் யாழ்ப்பாணத்தின் பல பாகங் களிலும் விஸ்தரிக்கப்பட்ட பின்னர் அநேகமாக இம்மாதம் 20-ந் திகதி திருக்கோணமலே

(5ம் பக்கம் பார்க்க)

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

நீர்ப்பாசன திணைக்களம்

என் 792- (1) செங்கலடி உப-பிரிவில் தலைப்பிட்டி - ஓயா அணைக்கட்டு வலதுகை வாய்க்காலுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைத்துக் கொடுத்தல். (2) தலைப்பிட்டி-ஓயா அணைக்கட்டு இடதுகை வாய்க்காலுக்கு நீர்ப்பாசன வசதிகள் அமைத்துக் கொடுத்தல். இதன் முழுவிபரங்களுக்கும் 5-4-63இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 2-ம் தொகுதியைப் பார்க்கவும்.

வரி விளம்பரம்

தேவை

ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்கள எஸ். எஸ். ஸி. தரா தரத்துடன் செல்வாக்கும், நேர்மையும் நிறைந்தவர்கள், வெளி வேலைப் பிரதிநிதி, அபிவிருத்தியாளர் பதவிகட்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பம் 17-4-63-க்குப் பின் ஏற்கப்படமாட்டாது.

மனுப்பண்ணுக:-

மனேஜர், தபினன்ஸ் அன்கறன்ரி கொம்பனி லிமிடெட், மாவிட்டபுரம், தெல்லிப்பளை 864

அறிவித்தல்

யாழ்ப்பாணம், பழம்நீரேட்டு, 30-ம் வீட்டில் நானும் எனது மகள் சாரதாவும், ம. மனோகரனும் குடியிருந்தோம். நான் இம்மாதம் 3-4-63-ல் வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன். எனவேருக்கு திருநெல்வேலி தெற்கு சிவன்கோவில் வீதியில் இருக்கும் நல்லதம்பி இரத்தினசிங்கம் ரூபா 600/- அறுநூற்றிற்கு 12 வீதவட்டியுடன் தருவதாக எனக்கு எழுதித்தந்த நோட்டு ஒன்று காணாமற் போய்விட்டது. அந்த நோட்டை யாரும் கொடுத்துப் பணம் பெற முடியாது என்பதை இத்தாலறிவிக்கின்றேன். இந்த ஆண்டு முற்பகுதியில் நோட்டு எழுதப்பட்டது. இ. செ. பொன்னம்பலம், திருநெல்வேலி தெற்கு, 98/1 சிவன் கோவில் வீதி, யாழ்ப்பாணம். 866

ஆள்தேவை

பத்திரிகை சப்ளை செய்வதற்கு நேர்மையுள்ள வாலிபர் தேவை. சொந்தத்தில் சைக்கிள் வைத்திருப்பவராக இருக்க வேண்டும். விரும்புவோர் நேரில் வரவும். என். எஸ். திருநாவுக்கரசு, யாழ் பிடாஸ்டோர், 163, நாவலர்சந்தி, யாழ்ப்பாணம். 867

தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றோர் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணாந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

பேச்சுப்போட்டியில் தகுதிப் பரிசு

குரும்பசிட்டி, திங்கள் குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் அண்மையில் நடாத்தப்பட்ட "ஈழகேசரி" பொன்னையா ஞாபகார்த்தப் பேச்சுப் போட்டியில் பல இடங்களிலுமிருந்து பெருந் தொகையான மாணவர்கள் வந்து கலந்து கொண்டனர்.

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தைச் சேர்ந்த செல்வி. க. கோமதிதேவி மேற்பிரிவில் பங்கு பற்றித் 'தகுதிப் பரிசு' பெற்றுக் கொண்டார். இந்நிலையத்தைச் சேர்ந்த செல்வன் அ. ஸ்ரீபதியும் இப்போட்டியில் பங்குபற்றியுள்ளார்.

பல்கலைக்கழக

கேள்வித்தாள் முன்னதாக வெளியானது?

கொழும்பு, ஞாயிறு

தற்பொழுது பல்கலைக்கழகத்தில் நடைபெறும் சடைசிப் பரீட்சையின் கேள்வித்தாள்கள் வெளியாகியுள்ளதென ஒரு வதந்தி உலாவி வருவதாகத் தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்றும், இதையிட்டு ஒரு சிறு தகவல் இருந்தாலும் உடனடியாக விசாரணை நடத்த தனக்கு அறிவிக்குமாறு எல்லோரையும் கேட்டுள்ளதாக இலங்கைப் பல்கலைக்கழக உப-வேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிகலே நேற்று தெரிவித்துள்ளார்.

கேள்வித்தாள் வெளியானதையிட்டு, மாணவர் மன்றத்தின் தலைவர் திரு. ஏ. தங்கநாயக்காவின் ஒத்துழைப்பை கோரியதோடு இவ்விஷயமாக பல்கலைக்கழகத்தின் உள்ளேயும், வெளியேயும், ஏதாவது தகவல் கிடைத்தால், உடனே தெரிவிக்குமாறும் திரு. அட்டிகலே கேட்டுள்ளார்.

இதுவரை கேள்வித்தாள் வெளியான செய்தி பற்றி தகவல் ஒன்றும் கிடைக்கவில்லையென்றும், இந்த வதந்தியில் ஏதாவது உண்மையிருந்தால், சம்பந்தப்பட்ட பரீட்சையை ரத்துசெய்து, பின்பு புதிய பரீட்சைக்கு ஒழுங்கு செய்வதைத்தவிர வேறு வழியில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்குப் பல்கலைக்கழகத்தின் உள்ளேயும் வெளியேயும் சேர்ந்து 887 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். இப்பரீட்சையுடன் சம்பந்தப்பட்ட விசேஷ கலைப் பரீட்சை மார்ச் 30-ல் ஆரம்பித்துத் தொடர்ந்துநடைபெறுகிறது.

நாயை காப்பாற்றுகையில் ரயில் மோதி மரணம்

மூரிகாமம், திங்கள்

ரயில் மோதி மரணமாகவிருந்த தனது நாயைக் காப்பாற்ற முனைந்த வியாங்கொடையைச்சேர்ந்த சுசிலாவதி தனது நாய்க்கு யமனாக வந்த அதே ரயிலில் மோதுண்டு ஸ்தலத்திலேயே மரணமானார்.

அனுமதி மறுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் தமிழ் இயக்க வாரப் பிரசாரம் செய்வதற்காக ஒலிபெருக்கிக்கு கோரிய அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது.

மொழிகளுக்கிடையே போட்டியில்லை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"ஒரு மொழிக்கும் மற்றொரு மொழிக்குமிடையே போட்டி இருப்பதில்லை. ஆனால் நாடுகளுக்கிடையேதான் போட்டி காணப்படுகிறது. வட மொழி தொன்மையானது. பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டது" என்று பேராசிரியர் திரு. எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரிகள் வண்ணை நாவலர் வித்தியசாலையில் வட இலங்கை சமஸ்கிருத சங்கம் நடத்திய வால்மீகியின விழாவில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சமஸ்கிருத மொழியிலுள்ள சிறப்புக்களைக் குறிப்பிட்டதுடன் இராமாயண சுந்தர காண்டத்தின் சிறப்பை எல்லாம் எடுத்துரைத்தார்.

விழாவிற்குத் தலைமைவகித்த திரு. டி. கே. சீதாராம சாஸ்திரிகள் பேசுகையில் சங்கத்தின் நோக்கங்களை விளக்கிக் கூறினர். மேலும் அவர் 'வால்மீகி தினத்தைக் கொண்டாடுவதனையும் ஊற்புறுத்தினர்.

சமஸ்கிருத விஷ்வ பரிஷக்கினுடைய புத்தூர்க் கேந்திரத்தினால் சென்ற ஆண்டு நடந்தப்பட்ட பம்பாய் பாரதீய வித்தியா பவனம், சென்னை அமர பாரதி பரீட்சா ஸமிதி என்பனவற்றின் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்குரிய பரிசுகளையும், தராதரப் பத்திரங்களையும் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் வழங்கினார்.

பரீட்சைக் கருமபதரிசி திரு. ச. ப. சர்மா தமது பரீட்சை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

சிவமயம்

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் சுபகிருது வருடம் பங்குனி மாதம் 28-ந் திகதி 10-4-63 புதன்கிழமைமாலை 7 மணி முதல் 9 மணிவரையிலுள்ள சுவாதி நக்ஷத்திரமும் சுவகரணமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

வண-மேற்கு பிரபல வர்த்தகரும் சந்திரா கபே. இராஜேஸ்வரி மில்ஸ் ஆகியவற்றின் அதிபருமாகிய **திரு. வை. செல்லையா** அவர்களின் புத்திரன் திருநிறை மகள்வன் **கனகசபை** அவர்களுக்கும்

தலையாளியில் இருக்கும் **திரு. அ. சின்னையா** அவர்களின் புத்திரி திருநிறை செல்வி **புவனேஸ்வரி** அம்மாளுக்கும்

செல்வச்சன்னதி கோயிலில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ் வமயம் தாங்கள் தங்களிஷ்டமித்திர குடும்பசமேதராய்ச் சமூகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்து மணமகனின் 353, காங்கேசன்துறைவீதியில் உள்ள வரவேற்பு வைபவத்திலும் பங்குபற்றி ஏகுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

353, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்
வை. செல்லையாவும் பாரியாரும்

குடும்பங்கள் கூடி மகிழும்போது...

குதூகலமும் திருப்தியும் நிலவுகிறது. அன்புக்கும் உறவுக்கும் பாத்திரமானவர்கள் மத்தியில் சீராட்டிப் பாராட்டி மகிழும் பண்பும் பரிமளிப்பும் பொங்கி வழிகிறது.

இத்தகைய மனோகரமான வேளைகளில், உங்களைச் சுற்றி அமர்ந்திருக்கும் விருந்தினருக்கு மகிழ்வூட்டுவது **வில்லியம்ஸ்** பிஸ்கட்டுகளின் தனிச்சுவை. மதுரமான உருசியூட்டி முறுமுறுவென்று நாவிற் கரைந்து தித்திக்கும் புது வாசனைப் பொலிவுள்ள வகை வகையான பிஸ்கட்டுகள், இலங்கையின் தொழில் விருத்தித்துறையில் உங்களுக்குப் பெருமையும் நம்பிக்கையும் தரும் பிஸ்கட்டுகள் இவையே.

சிறந்ததையே பரிமாறுங்கள்... **வில்லியம்ஸ்** பரிமாறுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஏகவிநியோகஸ்தர்கள்

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

"பேசும் மொழியிலும் பார்க்க இதயமொழியே சிறப்புவாய்ந்தது"

—இலங்கரத்தினை

தெல்தோட்ட, திங்கள்

நாங்கள் எந்த மொழியைப் பேசினாலும் இதயபூர்வமாக நாங்கள் ஏற்றுக் கொண்ட மொழிதான், பேசும் மொழியிலும் பார்க்க சிறப்பு ஆதலால் பேசும் மொழியிலும் பார்க்க இதயபூர்வமான மொழிதான் மேம்பட்டிருக்க வேண்டுமெனக் கருதுகிறேன்" என்று உணவு வர்த்தக மந்திரி திரு. டி. பி. இலங்கரத்தினை தெல்தோட்டை அரசாங்க தமிழ் பாடசாலையைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

தமிழர் சிங்களவர் ஒற்றுமை பற்றி மந்திரி இலங்கரத்தினை கூறியதாவது:-

இலங்கையின் பலபாகங்களில் முரன்பாடுகள் காணப்பட்டாலும்' இதுவரை எனது தொகுதியில் அப்படி ஒரு முரண்பாடு காணக்கிடையாததையிட்டு நான் பெருமைப்படுகிறேன். கலஹா பகுதியில் சிங்கள, முஸ்லீம், தமிழ் பாடசாலைகள் உண்டு. ஆதலால் அரசாங்க மொழியாகிய சிங்கள மொழியை இப்பாடசாலைகளில் போதிக்க எதுவித கஷ்டங்களும் இருக்காது என நான் எதிர்பார்க்கிறேன்.

எனது தெரிவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட பெட்டீசத்தை நீதிமன்றம் நிராகரித்த சமயம், ஹெவகெட்ட தொகுதி வாக்காளர்கள் என்னை கௌரவிக்கும் முகமாக பல கூட்டங்கள் நடாத்த ஏற்பாடு செய்தார்கள். எதிர்பாராத விதமாக எனது சுகயீனம் காரணமாக நான் அக்கூட்டங்களில் பங்குபற்ற முடியவில்லை. ஆனால் என்னு சார்பாக அக்கூட்டங்களில் பங்கு பற்றியவர்கள் தங்களுக்கு விமரிசையான வரவேற்பு கிடைத்ததென்றும், மாலைகளும், புஷ்பங்களும் பெருவாரியாக குவிக்கப்பட்டதென்றும் தெரிவித்தார்கள். அதற்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தெல்தோட்டை அரசாங்கத் தமிழ் பாடசாலை திரு. ஆர். ஏ. நடேசன் நன்கொடையாக அளித்த 2 ஏக்கர் நிலத்தில் 24,000 ரூபா செலவில் கட்டப்பட்டது.

திறப்புவிழாவைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமைவகித்த திரு. நடேசன், சாதிசமய அடிப்படையின்றி எல்லோருக்கும், ஒருமுகசேவை செய்து இலங்கையின் சரித்திரத்தையே மந்திரி இலங்கரத்தினை மாற்றியமைத்து விட்டார் எனக கூறினர்.

திரு. எஸ். தொண்டமான் எம். பி. பேசியபோது கூறியதாவது:

"அநேகமான பிரசினைகள் முக்கியமாக சிறுபான்மை மக்களை எதிர் நோக்கியுள்ளது. இவற்றில் மிக முக்கியமானது பிள்ளைகளின் கல்வி சம்பந்தப்பட்டது"

நேருவின் தமிழ்நாட்டு விஜயம்

சென்னை, ஏப்ரல் 7

இம்மாதக் கடைசியில் தமிழ் நாடுக்கு வர இருக்கும் பிரதமர் நேரு தென் ஜில்லாக்களில் நடைபெறவிருக்கும் உப தேர்தல்கள் சம்பந்தமாக பொதுக் கூட்டங்களில் பேசுவார் என்றும் தெரிகிறது.

மே மாத ஆரம்பத்தில் பிரதமர் நேரு தமிழ் நாட்டில் உள்ள கோடை வாசஸ்தலமான ஊட்டி அல்லது கொடைக்கானலில் சில நாட்கள் தங்கி ஓய்வு பெறுவார் என்றும் தெரிகிறது.

பாகிஸ்தானியர் தேநீர்ப்பிரியர்

லாகூர், ஏப்ரல் 7

அதிகமான அளவுக்கு தேயிலை அருந்துவதில் பாகிஸ்தானியர்கள் உலகில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளனர். உலகிலேயே மிகவும் அதிகமான அளவுக்கு தேயிலை அருந்துபவர்களைக் கொண்ட நாடு பிரிட்டனாகும்.

சாதாரணமாக பாகிஸ்தானியர் ஒவ்வொருவரும் சராசரியாக வாரத்துக்கு 21 கப் தேயிலை அருந்துகின்றனர். பிரிட்டிஷ்காரர்கள் வாரத்துக்கு தலா 36 கப் தேயிலை சாப்பிடுகின்றனர். இந்த தகவலை லாகூரில் உள்ள மாதப்பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

40 மொழிகளில் திருமண நிகழ்ச்சி

லண்டன், ஏப். 8

இளவரசி அலெக்ஸாண்டிரா விற்கும், திரு. அன்கஸ் எகில்விக்கும் இம்மாதம் 24-ம் திகதி வெஸ்ட் மினிஸ்டரில் நடைபெறவிருக்கும், திருமண நிகழ்ச்சிகள் 40 மொழிகளில் ஒலிபரப்பப்படும் என ரிபிரிட்டிஷ் ஒலிபரப்பு ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

ரத்த அழுத்த கோளாறுமருந்து

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும்

சென்னை, ஏப். 7

ரத்த அழுத்தக் கோளாறைக் குணப்படுத்துவதற்கான மருந்தைத் தயாரிக்க ஜெர்மன் மருந்து தயாரிப்பு கம்பனி ஒன்று தமிழ் நாட்டில் ஒரு தொழிற்சாலையை அமைக்க உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

கோவை ஜில்லாவில் கிடைக்கும் சர்ப்பகந்தி என்னும் மூலிகையின் வேரைக் கொண்டு மேற்படி மருந்தைத் தயாரிக்க இக் கம்பெனி திட்டமிட்டிருந்தது.

ஆனால் பெருமளவில் இந்த மூலிகையைப் பிடுங்கி விட்டால் பிறகு இவற்றை மீண்டும் வளர்க்க காலதாமதம் ஏற்பட்டு மருந்து தயாரிப்பு தொழில் பாதிக்கப்படும் என்ற காரணத்தால் இந்த யோசனை கைவிடப்பட்டது, எனவே இந்த மூலிகைக்கு பதிலாக வேறு ஒரு மூலிகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மூலிகையின் இலைகளில் சர்ப்பகந்தியின் வேரில் உள்ள அதே மருந்துச் சத்து இருப்பதாக ரசாயன பரிசோதனையின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. மேற்படி மூலிகையின் இலைகளிலிருந்து மருந்து தயாரிக்கும் முறைபற்றி அக் கம்பெனி இப்போது ஆராய்ந்து வருகிறது.

நாவலர் காட்டிய வழியில் மலேநாட்டில் சமயப்பணி

நாவலப்பிட்டி சைவ மகாநாட்டில்உரை

நாவலப்பிட்டி, ஞாயிறு

"நாவலர் ஐயாவின் அடிச் சுவட்டைப் பின்பற்றி அன்னார் செய்துவந்த தொண்டினை தொடர்ந்து செய்வோம். மாணவர் மூலம் சமயப் பணியை விருத்திசெய்து உலகிற்குப் பயனுறச்செய்வதே இன்றைய சூழ்நிலையில் சிறந்த திட்டமாகும்."

இவ்வாறு அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கத் தலைவர் வித்துவான் திரு. வ. செல்லையா நாவலப்பிட்டியில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

கதிரேசன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இம் மகாநாட்டை அதிபர் திரு. க. சபா. ஆனந்தர் தொடக்கி வைத்தார். ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா வரவேற்புரை நிகழ்த்தினர்.

மலேநாட்டிலுள்ள பன்னிரண்டு லட்சம் தொழிலாளர் மத்தியில் சமயப்பணபுரிவதே சைவப்புலவர்களின் மேலான பணி. சமய வாழ்வில் நம்பிக்கைகொண்டுள்ள தொழிலாளர்கள் சமய வாழ்க்கையில் தங்களை அர்ப்பணிப்பதன் மூலம் சகல நன்மைகளையும் பெறமுடியும். சைவ சமயம் அனுதியானது. உலக மக்களை ஒன்றுபடுத்தும் சக்தியுள்ளது.

தொடர்ந்து சைவப்புலவர் திரு. வ. செல்லையா பேசுகையில் கூறியதாவது:-

சமயம் வேறு வாழ்க்கை வேறல்ல. இன்றைய சூழ்நிலையில் மக்களின் வாழ்விற்கும் சமயத்திற்கும் ஒற்றுமை காணப்படவில்லை. இதனாலேயே அகில உலகிலும் அமைதி குறைவு காணப்படுகிறது.

நாலுபேர் சொன்னபடி நடக்கவேண்டுமென்பது சாதாரண வழக்கு. இங்கே நாலுபேர் என்பது சமயகுரவர் நால்வரையுமே குறிக்கிறது. நால்வர் காட்டிய வழியைப் பின்பற்றியே நாவலர் பெருமானும் பணிபுரிந்தார். அதை நாமும் பின்பற்றுவோம். அதன் அடிப்படையிலேயே மலேநாட்டில் நடத்தும் முதல் மகாநாடு இது. இதற்கு ஈழநாட்டு சைவப் பெருமக்களின் ஆதரவையும், ஆசிகளையும் விரும்புகிறோம்.

இம்மகாநாட்டில் 'மூவர் தமிழ்' என்பது பற்றி பண்டிதர் திரு. வே. சங்கரப் பிள்ளையும், "வைதிக சைவம்" என்பதுபற்றி சைவப்புலவர் திரு. இ. செல்லத்துரையும், "திருவாசகத்தேன்" என்பது பற்றி சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்தமும் சொற்பொழிவாற்றினர். 'அருங்கலி பெற்ற அம்மை' என்பதுபற்றி சைவப்புலவர் திரு. இ. திருநாவுக்கரசு சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார். இசைப்புலவர் திரு. மு. வர்ணகுலசிங்கம் இன்னிசை விருந்தளித்தார். நாவலப்பிட்டி இந்து வாலிப சங்கச் செயலாளர் திரு. க. மார்க்கண்டுவும், சைவப்புலவர் சங்கச் செயலாளர் திரு. ச. சச்சிதானந்தமும் நன்றி கூறினர். நாவலப்பிட்டி இந்து வாலிய சங்கத் தலைவர் திரு. பொ. செ. இலட்சுமணன் மலர் மாலை சூட்டி பேச்சாளர்களை வரவேற்றார். திரு. நா. அருமைநாயகம் திருமுறை பாடினர்.

9 கப்பல்களில் இந்தியாவுக்கு ராணுவ ஆயுதங்கள்

பிரிட்டன் அனுப்பியுள்ளது

புதுடில்லி, ஏப்பரல் 8

கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து இந்த வார இறுதி வரை பிரிட்டனிலிருந்து ராணுவ ஆயுதங்களுடன் 9 கப்பல்கள் இந்தியாவுக்கு வந்துள்ளன. பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த ஆயுதங்களின் விபரம் வெளியிடப்படவில்லை. மலைப் பகுதிகளில் போரிடுவதற்கான வகையில் இந்திய ராணுவப் படையில் 6 புதிய டிவிஷன்களை அமைப்பதற்காக இந்த ராணுவ ஆயுதங்கள் பயன்படுத்தப்படும்.

இந்தியாவுகு சுமார் ரூ. 60 கோடிக்கு ராணுவ ஆயுதங்கள் கொடுக்க அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் காமன்வெல்த் நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன. அதன்படியே இந்த ராணுவ ஆயுதங்கள் இந்தியாவுக்கு அனுப்பப்படுகின்றன. இதில் பிரிட்டனும் மற்ற காமன் வெல்த் நாடுகளும் ரூ 30 கோடி பெறுமான ஆயுதங்களை அளிக்கும். அமெரிக்கா மட்டும் ரூ 30 கோடிக்கு ஆயுதங்களை அனுப்பும். சீனா மீண்டும் தாக்கினால் அதைச் சமாளிப்பதற்கான வகையில் இந்தியவிமானப்படையைப்பலப்படுத்த மேற்படி ராணுவ ஆயுத உதவியின் அளவை உயர்த்த வேண்டுமென்று கோருவது பற்றி தற்போது இந்திய அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

இந்தியாவில் புதிதாக ராணுவ ஆயுத தொழிற்சாலைகளை அமைப்பது, தற்போதுள்ள தொழிற்சாலைகளை நவீன முறையில் மாற்றியமைப்பது, இத்தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை முழு அளவில் பயன்படுத்துவது ஆகியவைபற்றி பிரிட்டிஷ் ராணுவ ஆயுத நிபுணர் கோஷ்டி செய்த சிபாரிசுகள் இப்போது பரிசீலிக்கப்பட்டுவருகின்றன. இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு அடுத்த மாதம் விஜயம்செய்ய இருக்கும் உயர்தர ராணுவ, சிவில் அதிகாரிகளைக் கொண்ட தூதுகோஷ்டி புதிதாக ஆயுத தொழிற்சாலைகளை அமைப்பதற்கான நிதி உதவி, யந்திர உதவி, தொழில் நுட்ப உதவி ஆகியவற்றைப்பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும்.

இந்தியாவில் பாதுகாப்பு சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை ஆயுத உற்பத்தித் தொழிற்சாலைகளாக மாற்றலாமென்று இந்தியாவுக்கு வந்திருந்த பிரிட்டிஷ் ராணுவ ஆயுத நிபுணர் கோஷ்டியினர் யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

கோட்டை தோண்டி எடுக்கப்பட்டது

லாகூர், ஏப். 6

பாம்பூர் என்னுமிடத்தில் செய்த அகழ்வாராய்ச்சியின் மூலம், கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து 7-ம் நூற்றாண்டுக்கு இடைப்பட்டகாலத்தைச் சேர்ந்த இந்து, பௌத்த, மேற்காசிய நாகரிகத்தின் தடயங்களும் லாகூரை இல்லாமியர் கைப்பற்றிய முக்கிய மான சில செய்திகளும் கிடைத்துள்ளன.

7000-ம் அடி நீளமும், அரைவட்ட வடிவில் இடைவெளிவிட்டுக் கட்டப்பட்ட 19 அடி உயரமுள்ள பாதுகாப்பு அரண்களும் அடியில் பாறைகளாலான கரைக்கட்டும் கொண்ட ஒருமுழுக் கோட்டையைத் தோண்டி எடுத்துள்ளனர். அப்பாசித் கலிஃப்கள் அல்லது அவர்களின் ஆட்சிப் போராட்டகாலத்தைச் சேர்ந்த தங்க, வெள்ளி, செப்புக் காசுகளும் பாம்பூரில் கிடைத்துள்ளன. மேற்படி தங்கக் காசுகளில் ஒன்று ஒன்பதாவது அப்பாசித் கலிஃப் வாசிக்தில்லாவால், கி.பி. 844-ல் எகிப்தில் அச்சடிக்கப்பட்டது. மேன்மையான மஞ்சி ஒன்றும், இரண்டு சிவலிங்கங்களைக் கொண்ட ஒரு சிவாலயமும் இதே இடத்தில் முன்னர் கண்டு பிடிக்கப்பட்டன.

(தேவன்)

"தரமான ஆங்கிலத்தை நாம் கற்கவேண்டும்"

கருத்தாங்கத்தில் உதவி வித்தியாதிபதி

செங்கடகல, திங்கள்

"ஆங்கிலம் ஒரு உலக மொழி இலங்கை மக்களாகிய நாங்கள், தரமான ஆங்கிலத்தை அதிகம் கற்கவேண்டும்." என்று கண்டியில் நடைபெற்ற ஆங்கில உதவி ஆசிரியர்களின் கருத்தரங்கமொன்றில் உதவி வித்தியாதிபதி திரு. யு. டி. ஐ சிறிசேன பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:- "உதாரணத்துக்கு நாம் சீனாவை எடுத்துக்கொள்வோம். அந்த பெரும்பான்மையான மக்கள், 45 கோடி மக்கள் சீன மொழியைப் பேசுகின்றனர். 45 கோடி மக்களின் மொழி சீன மொழியாக விருந்தும், உலகம் பூராவும் ஆங்கிலமே முக்கிய மொழியாகக் கருதப்பட்டுவருகிறது. உலகிலுள்ள ஒலிபரப்பு நிலையங்களில் அரைவாசி நிலையங்கள், ஆங்கிலத்தில்தான் தங்களது நிகழ்ச்சிகளை நடத்துகின்றன. இதனுடன் ஏராளமான பத்திரிகைகளும் ஆங்கில மொழியில்தான் வெளியாகின்றன. உலகம் பூராவும் ஆங்கிலம் ஒரு பொது மொழியாகவிருப்பதால், சர்வதேச உடன்படிக்கைகள் யாவும் ஆங்கிலத்தில் தான் பதிவுசெய்யப்படுகின்றன.

இலங்கை மக்கள், சில காரணங்களுக்காக, சில வருடங்களுக்கு முன்னர் ஆங்கிலத்தைப் பயின்றார்கள். தொழில் பார்ப்பதற்காகவும், சமூகத்தினரிடையே புழங்கிகொள்வதற்காகவும் ஆங்கிலத்தை அவர்கள் கற்றதுடன், அப்பொழுது ஆசிரியர்களாகவும் செலுத்தியவர்களின் மொழியாக ஆங்கிலம் இருந்த காரணத்திற்காகவும் ஆங்கிலத்தை இலங்கை மக்கள் கற்றனர்."

வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

காலி, திங்கள்

முற்பணம் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்துக்காக கடந்த வெள்ளிக்கிழமை முதல் வேலை நிறுத்தம் செய்த காலி தாலிம் மார்பு நோய் சிகிச்சை நிலையத்தைச் சேர்ந்த 30 ஊழியர்கள், தங்களது வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். முற்பணம் கொடுக்கப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

'சிரமதான இயக்கத்தில் தமிழர் பங்கு

வவுனியா, திங்கள்

'தமிழர்களின் சரித்திர ஏடுகளை ஒரு தரம் புரட்டிப் பார்த்தால், கடந்த காலத்தில் தமிழ்ப்பேசும் மக்கள் சிரமதான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதைக் காணலாம்' என்று கோவில்குளத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் வவுனியா மன்னர் மாவட்ட ஸ்தல ஸ்தாபன உதவிக் கமிஷனர் திரு. என். சிவராசா பேசுகையில் கூறினர்.

மணி வாக்கு

மனித ஜன்மம் கிடைத்தற்கரிய மிக அருமையான செல்வம். தெய்வம் தமக்குள்ளே இருப்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். உங்களது இதய மலரிலே இறைவன் இருக்கின்றார். உங்களுக்கும் இறைவனுக்குமிடையே உள்ள மாயையாகிய திரையை நீக்குங்கள். முதலில் தெய்வம். பின்பே மற்றவை எல்லாம்.

— சுவாமி ராமதாஸ்.

ஈழநாடு
EELANADU: National Tamil Daily | Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 27 உ (9-4-63)

அரசியல் நடவடிக்கை முறைகள்

நமது அரசியல் இலட்சியங்களைப் பெறுவதற்குச் செய்யும் முயற்சியிலே, என்னவிதமான முறைகளை நாம் கையாள வேண்டுமென்பது மிக முக்கியமான விஷயம். முதலில் அரசியல் இலட்சியங்களைப் பற்றிய தெளிவான கருத்துக்கள் எந்த நாட்டுக்கும், எந்த சமூகத்துக்கும் அல்லது எந்த ஒரு கோஷ்டி மக்களுக்கும் இருக்கவேண்டியது அவசியமாகும்.

பொதுவாக மூன்றுவிதமாக அரசியல் இலட்சியங்களை வகுக்கலாம். அதாவது முடிவான இலட்சியம், இடைக்கால இலட்சியம், உடனடி இலட்சியம் என்பதாக. இம்மூன்று கட்டங்களும் முக்கியமானவையே. ஒரு தேசம் அல்லது சமூகத்தின் முடிவான இலட்சியத்தை உடனடியாகப் பெறுவதென்பது மிகவும் கடினமானது. படிப்படியாக, பல வருடகால முயற்சியாலும் தியாகத்தாலுமே அது கைகூடுவதாக இருக்கும். தங்களது முடிவான அரசியல் இலட்சியங்களைக் குறித்து தெளிவான கருத்துக்களை ஒரு நாடோ, சமூகமோ, அல்லது ஒரு கோஷ்டியினரோ திட்டப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அதுமட்டுமன்றி, இது குறித்து ஒவ்வொரு பிரஜையும் ஆணும் பெண்ணும் தனிப்பட்ட முறையிலே தங்களுக்குள் சிந்தனை செய்து, திட்டமான கருத்துக்களைக் கொள்ளவேண்டும்.

நமது அரசியல் இலட்சியங்களைப் பெறுவது எவ்வளவு முக்கியமோ, அதேபோல அந்த இலட்சியங்களைப் பெற நாம் கைக்கொள்ளும் முறைகளும் முக்கியமாகுமென்று மீண்டும் வற்புறுத்தவிரும்புகிறோம். ஏனெனில் சரியான, விவேகமான அரசியல் முறைகளை நாம் கைக்கொள்ளாவிடில், நமது அரசியல இலட்சியத்தைப்பெறுவதும் நமக்கு அதிகமாக அசாத்தியமாகிவிடும். இந்தக் கொள்கை எல்லா நாடுகளுக்கும், எக்காலத்துக்கும் உகந்ததுபோல் நெருக்கடியான இந்தச் சமயத்திலே தமிழ்பேசும்மக்களுக்கும் இதுபொருந்துவதாகும். தமிழ் மக்கள், தங்களது அரசியல் லட்சியங்களைப்பற்றித் தெளிவான கருத்துக்கொள்வதுடன், அந்த லட்சியங்கள் மேலானவையாக இருக்கவும் பார்த்துக்கொள்ள வேண்டும். இதேசமயம் அந்த இலட்சியத்தை அடைவதற்கான முறைகள் பற்றியும் தெளிவான கருத்துக்கொள்வதும், அவசியமாகும். தங்கள் சமூக, மொழி, கலாசார, அடிப்படை உரிமைகள் இவற்றைப் பாதுகாத்துக்கொள்வதுடன், இலங்கையிலே, தங்கள் சரித்திர கலாசாரப் புகழுக்கேற்ப, தங்கள் சமூகம்தலைநிமிர்ந்துமானத்துடனும் மதிப்புடனும்வாழவும், இலங்கையிலுள்ள மற்றமக்கள், உலகம் இவற்றுக்கும் நன்மை பயக்கும் விதமாகவும், தாங்கள் கையாளும் அரசியல் நடவடிக்கைகள் இருக்கும்படியும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இவ்வித அரசியல் நடவடிக்கை முறைகள் அவ்வப்போதுள்ள நிலைமைக்குத்தக்கபடி மாறவேண்டிய அவசியமுமுண்டு. இதற்கு விரிவான முறையில் அரசியல் வேலைத்திட்டமொன்று வகுக்கப்படவேண்டியிருக்கும். ஒரு குறிப்பிட்ட சமயத்திலே ஒரு குறிப்பிட்ட நடவடிக்கை நல்ல பலன் அளிக்கமுடியாவிடில், அந்தமுறை நமது மேலான இலட்சியத்துக்குத் தீங்குசெய்வதாகவுமிருக்குமாயின், அவ்வித முறையைத் தகுந்தகாலம் வரும்வரை, கைக்கொள்ளாமல் ஒத்திவைப்பதே மேலானதாகும். இப்போதுள்ள சூழ்நிலையிலே, நமது இலட்சியத்தைப்பெற நாம் என்ன முறைகளைப் பயனுள்ள முறையில், உடனடியாகக் கையாளலாமென்பதை நம்மில் ஒவ்வொருவரும் சிந்தனைசெய்து தீர்மானிக்கவேண்டும்.

மேலும் அவ்வப்போது, கட்சி, அரசியல் தலைமைப் பதவி முதலிய எண்ணங்களின்றி, பொதுநன்மையிடையே முக்கிய சூறிக்கோளாகக் கொண்டு, விருப்பு வெறுப்பற்றமுறையில் நிலைமையைப் பற்றி நிதானமாகச் சிந்திக்கவேண்டும். நாட்டின் நன்மைக்காக யார் சேவைசெய்கிறார்களோ அவர்களே தங்கள் கட்சிக்கும் மேலான சேவை செய்துகொண்டவராவர் என்று ஒருஅரசியல் விவேகி கூறியுள்ளார். அதற்கிணங்க, கட்சி நன்மையை நாடுபவர்களும்கூட, நாடு, சமூகம் இவற்றின் நன்மையை முதலில் கருதுவது அவசியமாகும்.

சத்தியாக்கிரகம் அல்லது நேரடி நடவடிக்கை முறை நிரந்தரமாகக் கைவிட முடியாதுதான். என்றாலும் நாம் மேலே கூறிய கொள்கையின்படி இன்றைய சூழ்நிலையில் சத்தியாக்கிரகம் அல்லது நேரடி நடவடிக்கை எடுப்பது, தமிழருக்கு நன்மை விளைவிக்குமா அல்லது அவர்களுக்கு மாறுகவுள்ள சக்திகளின் கைகளைப் பலப்படுத்துமா என்பதைப்பற்றி நிதானமாக தமிழ்ச் சமூகம் யோசித்து தக்க முடிவு செய்யவேண்டும். வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சியின் பொதுநிர்வாக சபை, நேரடி நடவடிக்கையை இப்போது எடுப்பதல்ல என்று ஒத்திவைத்துள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது. நாம் மேலே குறிப்பிட்டபடி, இன்றைய நிலையில் இந்தத் தீர்மானம் வரவேற்கத்தக்கதும் விவேகமானதென்றுமே கூறவேண்டும்.

அச்சமற்ற ஆனந்த வாழ்வுக்கு வழிகாட்டும் சுவாமி ராமதாஸ்

இன்று சுவாமி ராமதாஸுக்கு 79 வயது முடிந்து 80-வது வயது பிறக்கின்றது. இந்த ஜயந்தி விழா ஆனந்த ஆசிரமம் உள்ளிட்டு, உலகில் பல இடங்களிலும் பக்தியுடன் கொண்டாடப்பட்டு சுவாமி அவர்கள் நீடுழிவாழளங்கும் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன. இந்த விழாவை முன்னிட்டு, ரிஷிகேசம் சுவாமி சிவானந்தர் சுவாமியைப்பற்றி எழுதியுள்ள இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

சுவாமி ராமதாஸ், பாரத நாட்டின் ஆத்மீகத்துறையிலே பூத்துள்ள ஓர் அருமையான மலராவார். ஒரு ஜீவன் முக்தர் கவலையற்று, பயமற்று, எப்போதும் ஆனந்த நிலையிலிருந்து பணிசெய்வரென்று வேத சாஸ்திரங்கள் கூறும். அதற்கு ஒருபிரத்யட்ச உதாரண புருஷராக, அவரது வாழ்க்கை பொலிகின்றது. இளவயதிலே அவரது ருசியான, அழகான வாழ்க்கையும், பின்னர் துணிச்சலுடனே, பயம் சிறிதுமின்றி அவர் வாழ்ந்த நிவிருத்திவாழ்வும் இன்று மகத்தான திவ்ய ஆனந்த நிலையிலே அவர் வாழ்வதும், உபநிஷத், கீதா வாக்கியங்களுக்கு நல்ல ஆதர்சமாக விளங்குகின்றது.

தான் எனும் சிறிதான நினைப்பிலிருந்து கடந்து சென்றவர்கள், தெய்வத்தையே எங்கும் எல்லாவற்றிலும் காண்பர் என்ற மகத்தான உண்மைக்கு சுவாமி அவர்கள் ஓர் இலக்கியமாவார்கள். அவர் இந்த தெய்வீக உணர்ச்சியுடன் ஒன்றுகிவிட்டார். பக்தி, வைராக்கியம், சத்சங்கம் இவற்றின் மூலமே தமக்கு இந்த நிலை வந்ததென்று ராமதாஸ் ஒரு கவிதத்தில் குறிப்பிடுகின்றார். பின்னர், திருவிருள் தான் மேலான முடிவான துணை என்று கூறுகின்றார். தெய்வீகத் திருவருளுக்கு சுவாமி ராமதாஸ் உண்மையான, நடமாடும் சின்னமாகவிளங்குகின்றார்கள்.

அவரது ஆத்மீக அனுபூதிகளும், பெறுபேறுகளும், அவரை 'சமதிருஷ்டி'யுள்ள ஞானியாக்கிவிட்டன. எல்லா உயிர்களிலும் அவர் தெய்வத்தையே காண்கின்றார். ஆகவே அவர் பார்வை தெய்வீக அடிப்படையில் வேரூன்றியுள்ளது. இவ்வித ஆத்மாக்களையே, ஸ்ரீ பரமாத்மா கீதையிலே "வாசுதேவ சர்வமிதி ஸ மகாத்மா சுதுர்லப" என்றுகுறிப்பிடுகின்றார். எல்லாசமயங்களும் நெறிகளும் அடிப்படையில் ஒன்றே என்று அவரை உறுதி கொள்ளச் செய்தது, அவரது இந்த அனுபவங்களே.

தெய்வம் அன்பே வடிவானவர். நன்றே செய்பவர். கருணாமிக்கவர். அவ்வித மகத்தான உண்மைப் பொருளுடனே இரண்டறக்கலந்துவிட்ட உணர்ச்சிதான் ஞானியின் இலட்சணமாகும். அவ்வித ஞானி, இப்பூவுலகிலே அன்பு, தியாகம், சேவை இவற்றைச் செய்வதின் மூலம் அந்த நிலையைப் பிரதிபலிப்பார். ராமதாஸும் இதற்கிணங்க, எல்லாரிடமும் குடிகொண்ட இறைவனுக்கு சேவைசெய்வதிலேயே மூழ்கி சதா ஆனந்த நிலையிலிருக்கின்றார். அவரது ஆனந்த ஆசிரமம் தெய்வீக ஆனந்தம் நிலைபெற்றுள்ள புனித இடமாகும். நாம் ஆனந்தமாக நீந்திக்கொண்டிருக்கும், எல்லையற்ற பேரின்பத்தின் அளவிலா வாவியில் எல்லாரும் மூழ்கி இன்பமடையவேண்டுமென்றுவிரும்புகின்றார்.

இதற்கு இரு வழிகளைக் கூறுகிறார் அவர். அதாவது இடைவிடாமல் தொடர்ந்து இறைவனை நினைப்பதும், அவரை எங்கும் காணும் பயற்சி பெறுவதுமேயாகும். இவ்விதம் நினைத்து அவரை எங்கும் பார்ப்பதற்கு, மேலான வழி, தெய்வீக நாமத்தை விடாமல் உச்சரிப்பது. திருநாமஜபத்தை கண்டிப்பாக வற்புறுத்துகின்றார் சுவாமி ராமதாஸ். தன்னடக்கம், சரணாகதி இவற்றிலே ஒழுங்கான சாதனையைச்செய்ய வேண்டுமென்றும் உபதேசிக்கின்றார். மிக உன்னதமான சரணாகதிக்கு அவர் ஓர் உதாரண புருஷராக விளங்குகின்றார். பரபக்தியும், ஞானமும் ஒன்றே என்பதை அவரது வாழ்க்கை காட்டுவதாக உள்ளது. உயர்ந்த வேதாந்தமும், விளக்கவேமுடியாத அன்பும் ஒன்றுசேர்ந்து ஓர் உருவானவர் ராமதாஸ்.

அவரது உன்னதமான தெய்வீக வாழ்க்கையை எல்லாரும் பின்பற்றுவார்களாக. விளக்கமுடியாத மேலான அத்தவைதிய ஞானநிலையை எல்லாரும் பெறுவதாக.

ஆசிரியருக்குக் கடிதம்

'டென்மார்க் இளவரசரில்லாத ஹாம்லெட்'

சனிக்கிழமை பத்திரிகைகளில் பிரதமர் கூட்டிய மகாநாடு பற்றிய செய்தி கண்டேன். தமிழர் பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்ற எண்ணம், தமிழரசுக் கட்சி போராட்ட ஏற்பாடுகள் செய்யும்போது தான். அரசாங்கத்திற்கு உண்டாவதும், தமிழரசுக் கட்சியினர் தீவிரமாக இல்லாத நாட்களில் அரசாங்கம் தமிழினத்திற்கெதிராக நடவடிக்கைகள் மேற்கொள்வதும், தமிழினத்தின் அரங்கில் தமிழரசுக்கட்சியின் அவசியத்தை அரசாங்கமே அவ்வப்போது உணர்த்துவதற்கு ஒப்பாகும்.

மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டோரின் பெயர்களைக் கண்டபோது, அரசாங்கம் எம்மொழியில் பிரச்னையைத் தீர்ப்பதற்குக்கொண்ட உணர்ச்சியின் விசுவாசத்தைச் சந்தேகிப்பது தவிர்க்க முடியாததாகின்றது. 'இம்மாநாடு ஓர் கண்துடைப்பு' என்பது தாராளமான கருத்தாகும்; இது 'வெறும் கேலிக்கூத்து' என்பதே பொருத்தமானதாகும். சீன-இந்தியப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு சீனு, அல்பேனியாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருப்பின் எவ்வளவு கேலிக்கூத்தாக இருந்திருக்குமோ, அதைப்போன்ற கேலிக்கூத்தாகும் இது!

சரியாகவோ, தவருகவோ இலங்கைத் தமிழினத்தை

(5-ம் பக்கம் பார்க்க)

ஐயாறன் எழுதுவது

நடேச பிள்ளையவர்கள் சென்ட்டர் பதவி ஏற்றது பற்றி இப்போது இங்கு அரசியல் வட்டாரங்களில்பெரிதும் பேசப்படுகிறது. காலியில் வந்த ஓரன்பர், இந்த சமயத்தில் அவர் இப்பதவியை ஏற்றிருக்கப்படாதென்றார். மொழிப் பிரச்னை காரணமாகவே யு. என். பி.யிலிருந்து விலகிய அவர், அதே கொள்கையைக் கடைப்பிடிக்கும் சுதந்திரக் கட்சியினர் அளித்த இப்பதவியை ஒப்புக்கொண்டது சரியாகாதென்றும், தமிழரின்கட்சி இதனால் பலவீனமடையுமென்றும் கூறினர்.

நேற்று மற்றோர் அன்பர் இதற்கு நேர்மாறான கருத்தை வெளியிட்டார். "சென்ட்டர் பதவியை ஏற்றதால் இந்த அரசாங்க மொழிக் கொள்கையை ஆதரிப்பதாகாது. மந்திரி பதவியை ஏற்றிருந்தால் அப்படிக் கருதமுடியும். இப் பதவியை ஏற்றதன்மூலம், அவர் மொழிப் பிரச்னைக்கு நல்லதோர் சமரச முடிவுகாண முயலுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. மேலும் இராமநாதன் பல்கலைக் கழகம் சீக்கிரத்தில் ஆரம்பமாவதற்கு, இந்த நியமனம் உதவியாகவுமிருக்கும். இதை முன்னிட்டே, இப்பதவியை பிள்ளையவர்கள் ஏற்றிருக்கவேண்டும்" என்றார்.

* * *

சென்ட்டர் அலீஸ், ராஜினாமா செய்த ஸ்தானத்துக்கு, ஒரு முஸ்லிம் அல்லது சிங்களவர் நியமிக்கப்படுவரென்றும், தமிழரை இந்த அரசாங்கம் நியமிக்காதென்றுமே பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் ஒரு தமிழரை அப்பதவிக்கு நியமிக்க பிரதமர் முன்வந்ததே, ஒரு நல்ல மனமாற்றத்துக்கான அறிகுறியென்றும், நல்ல காலம் வருவதற்கு இது ஒரு சுப சகுனமென்றும் சிலபட்டாரங்கள் கருதுகின்றன.

"தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு விரைவாக ஒரு தீர்வுகாண பிரதமர் நாட்டம் கொண்டுள்ளாரென்பதை இந்த நியமனம் உறுதிப்படுத்துகிறது" என்கிறார் சென்ட்டர் நடேசபிள்ளை. இம்முயற்சியில் தம்மால் ஆனவை செய்வதற்கு தமக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதென்கிறார் அவர்.

நடப்பதெல்லாம் நன்மைகே. ஜி. ஜி., எஸ். ஜே. வி. உள்ளிட்டுப் பல தமிழ்த்தலைவர்களையும் அழைத்துப் பேசப் பிரதமர் உத்தேசித்திருப்பதாகவும் மற்றோர் செய்தி கூறுகிறது. தமிழ்ப் பகுதியைச் சேர்ந்த 5 எம். பி.க்களும் கூறிய யோசனைமீதே பிரதமர் இப்பேச்சுகளை நடத்த முன்வந்துள்ளதாகவும் இவ்விஷயத்தில் ஒரு சமரசம் ஏற்படுத்த, சென்ட்டர் பிள்ளை மிக உதவியாக இருக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

* * *

பஹாய் இயக்கத்தைச் சேர்ந்த ஓர் அமெரிக்க தம்பதிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர். மிஸ்டர் ஷலேரனர் சூட், ஒரு கைத்தொழில் நிபுணர். இங்கு பல தொழிற்சாலைகளையும் பார்த்துவிட்டு, வாழைத்தண்டு, மட்டை இவற்றின் நாரிலிருந்து நவீன நார்ப்பட்டு தொழிற்சாலை ஆரம்பிப்பதுபற்றி ஆராய அவற்றைத்தம்முடன்கொண்டு செல்வதாகவும், கைத்தொழில் மந்திரியை அவர் கண்டுபேசியதாகவும் தெரிகிறது.

அவரது மனைவி ஜீன் சூட், அருங்கலைகளில் ஒரு பட்டதாரி. இலங்கையின் இயற்கை வனப்பும் மக்களும் தங்கள் மனதைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாகக் கூறினர். மதம் முதலிய வேற்றுமைகளில்லாமல், உலகமக்கள் எல்லாரும் ஒரே குடும்பமாக வாழ வழிகாட்டுவதால்தான் பஹாய் இயக்கத்தில் தாங்கள் ஈடுபட்டதாகச் சொன்னர்.

(5-ம் பக்கம் பார்க்க)

"இனத்தைக் காக்க மொழியும் பிரதேசமும் பாதுகாக்கப்படவேண்டும்"

வவுனியா பொதுக் கூட்டத்தில் திரு. எஸ். ஜே. வி. பேச்சு

வவுனியா, திங்கள்

"பொது மக்களின் விருப்பத்தை அலட்சியஞ் செய்யாது தமிழரசுக்கட்சியின் பொதுநிர்வாகசபை மன்னார் மகாநாட்டின் தீர்மானப்படி எடுக்க விருந்த நேரடி நடவடிக்கையை பின் போடுவதாகத் தீர்மானித்துள்ளது. நேரடி நடவடிக்கைக்குப் பூர்வாங்கமான எல்லாம் தமிழ் இயக்கத்தை நடாத்துவதெனவும் நேரடி நடவடிக்கை எப்பொழுது நடாத்துவதென நடவடிக்கைக் குழு தீர்மானித்து. சட்ட மறுப்பு இயக்கத்தை எப் போது எவ்விடத்தில் நடாத்த வேண்டுமெனவும் அறிவிக்கும்."

இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் வவுனியாவில் நேற்றுமாலை நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

திரு. இராசமாணிக்கம் மேலும் பேசுகையில், தற்போது அரசாங்கம் நடைபெறும் முறையில் சிங்களம் மாத்திரமா? சிங்களவர்மாத்திரமா? என்ற வகையிலிருக்கிறது என்றார்.

திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் பேசும் போது பின் வருமாறு பேசினார்:-

இன்றைய நிலையில் இலங்கையில் தமிழினமே அழிந்து போக வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கிறது. நாம் சிறுபான்மையினராயிருந்தாலும் நாம் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசமாகிய வடக்கு கிழக்கு மாகாணங்கள் எமது பிரதேசமாகத் திகழக்கூடிய விதத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். கிழக்கு மாகாணத்தில் இன்று அரசாங்க உதவியுடன் சிங்களவர்களைக் குடியேற்றும் மாதிரியைக் கவனிக்கையில் தமிழ் பேசும் மக்கள் அம்மாகாணத்தில் சிறுபான்மையினராகக் கூடிய தாகவிருக்கிறது. இவ்வித குடியேற்றத்தைத் தொடர்ந்து அனுமதிப்போமானால் நாம் ஒரு தனி இனமாக வாழ முடியாத நிலையிலிருப்போம்.

மொழியை அழிக்கும் திட்டம்

எமது மொழியை அழிக்கும் திட்டத்தை இவ்வரசாங்கம் கையாண்டுவருகிறது. நாமும் சிங்களச் சட்டத்தை முற்றாக எதிர்க்கிறோம். தமிழரசுக் கட்சியிலுள்ளவர்கள் மட்டுமல்லாமல் தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரும், 1961ம் ஆண்டில் எவ்விதம் ஒன்று திரண்டு சத்தியாக்கிரகம் செய்து 56 நாட்களாகச் சிங்கள அரசாங்கத்தின்கவனத்தை பாததோமோ அவ்வண்ணம் ஒற்றுமையாகப் போராட்டம் நடாத்தத் தயாராகுதல் வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிங்களம் மட்டும் அமுல் நடாத்தி சிங்களம் படிக்கச் செய்து எமது இனத்தை அழிக்க முற்படுகின்றனர். எமது மொழியில் நாம் பேசி எமது மொழியில் நாம் எத்தொடர்பையும் ஏற்படுத்தவேண்டும். வடபகுதியில் ஆங்கிலக் கல்வி கூடியதாலோ தெரியாது ஆங்கிலத்தில் எழுதும் மோகமுண்டு. எத்தொழிலிலுள்ளவரும் எமது மொழியையும் இனத்தையும் பாதுகாக்க முன்வந்து தமிழில் எதையும் எழுதும் பழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டும்.

முதூர் எம்.பி. ஜனாப் எம். ஈ. எச். முகமது அலி பேசும் போது இன்றைய நிலையில் தமிழ், முஸ்லிம் மக்கள் என்ற வித்தியாசமின்றி ஒருமித்துச் சிங்களச் சட்டத்தை எதிர்க்கத் யாராகுதல் வேண்டும் என்று தறிப்பிட்டார்.

குஅவர்மேலும் பேசியதாவது:

இன்று தமிழ் மகளுக்கு நடப்பதுதான் முஸ்லிம்களுக்கும் நாளை நடக்கும் என்பதை இன்னும் சிலர் உணரவில்லை. சுதேச வைத்தியசாலையென ஆயுள்வேத சித்த யூனானிப் பகுதிகள் தனி ஆயுள்வேத மாகவே மாறிக்கொண்டு போகிறது. தமிழ்பேசும் மக்களைப் படிப்படியாக ஒழிக்கவே கங்கணங்கட்டியுள்ளனர் சிங்களத் தலைவர்கள்.

பருத்தித்துறைப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்:

தமிழைப் பாதுகாக்க ஒவ்வொரு தமிழனும் முன்வர வேண்டும். அக் கடமையை ஒவ்வொருவரும் செய்தே நம் பாஷையைப் பாதுகாக்க வேண்டும்.

மலைநாட்டுப்பகுதி மக்களின் சார்பாகப் பேசியதிரு. இராமையா எல்லாம் தமிழியக்கத்தில் மலைநாட்டுத் தமிழ் மக்களும் கலந்துகொள்ள முன்வருவார்கள் என்றார்.

'டென்மார்க் . . .

4-ம் பக்கத் தொடர்ச்சி

இன்று பிரதிநிதித்துவம் வகிப்பவர்கள் தமிழரசுக்கட்சியினரே என்பதை ஜனநாயகத்தில் நாம் நம்பிக்கை கொண்ட எவரும் ஏற்றுத்தான் தீர வேண்டும். அபிப்பிராய சுதந்திரத்தின் அனுசரணையுடன் இத்தகைய நிலையைச் சிலர் துரதிருஷ்டமாகக் கூடக்கருதலாம். ஆனால் தமிழ் மக்கள் இதனை அதிஷ்டமாகக் கருதும் வரை தமிழரசுக்கட்சியின் தகைமையை எவரும் ஏற்கவேண்டியோரே கேவலம் ஜனநாயக அமைப்பாம் இலங்கை அரசமைப்பின் முதற் பாதுகாவலராகவிளங்க வேண்டிய பெண் பிரதமர், தமிழரசுக்கட்சியினரை அழைக்காமல் மாநாடு கூட்டியமை 'டென்மார்க் இளவரசரில்லாத ஹாம்லெட்' கதை என்ற ஆங்கில வாசகத்தை நினைவுறுத்துகிறது. சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யத் தமக்கு மட்டுமே அதிகாரமும் உரிமையும் உண்டு என திருமதி பண்டாரநாயக்கா கூறிக்கொள்வதில் அர்த்தம் உண்டு; ஆனால் அதேயளவு அதிகாரமும் உரிமையும் தமிழினத்தின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தமிழரசுக்கட்சிக்கும் உண்டென்பதை பிரதமர் மறுப்பதிலே குதர்க்கம் மட்டுமே உண்டு.

திருமதி சிறிமாவோ மக்கள் வாக்குகளால் தேர்வு பெறுமலையே பிரதமராக வந்ததன் 'தோஷமா' இங்ஙனம் வாக்காளர்தீர்ப்புமறக்கணிக்கப்படுவது? இந்த மாநாட்டு முயற்சி விடுதலைத்தாகத்தால் வீறு கொண்ட தமிழினத்தின் நாக்கை நீளுக்கும் 'எச்சில்' என்ற அளவுக்குக்கூடப் பயன் தராது.

ச. நவரத்தினம்.
யாழ்ப்பாணம்.

ஐயாறன்

(4-ம் பக்கதொடர்ச்சி)

அந்த இயக்கம் ஆரம்பித்த நாளுவது ஜூபிலி ஆண்டு இம்மாதக் கடைசியில் லண்டனில் நடைபெறுகிறது. அதில் கலந்து கொண்டுவிட்டு இலங்கை அழைப்பின் இங்கு வந்து சேவை செய்யத் தயாரென்றனர் இத்தம்பதிகள்.

* * *

பெருகலாந் தவம் பேதைமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோ ரானந்தம்
மருகலா னடி வாழ்த்தி வணங்கவே.

—திருநாவுக்கரசர்.

நேடி நடவடிக்கைக...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி ஆரம்பமாகாவிடினும் மிகக் குறுகிய காலத்தில் போராட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகும்என்பதே. நேரடி நடவடிக்கைக்குமு,போராட்டம் ஆரம்பமாகும் திகதியையும் நேரத்தையும் திடீரென அறிவிக்கும் என்றும் திரு. இராசமாணிக்கம் சென்னார்.

யாழ்ப்பாணத்தில் தமிழ் இயக்கவாரப் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொள்ள விருந்த திரு. இராசமாணிக்கம் அவசர வேலைகள் காரணமாக நேற்று மாலையே விமான மூலம் மட்டக்களப்புக்குப் பிரயாணமானர்.

உணவுப் பொருள் இறக்குமதி

மயிலிட்டி கிராம சபை கோரிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

நமது நாட்டுக்குரிய உணவுப் பொருட்கள் நேரடியாகக் காங்கேசன்துறையில் உணவுக் கப்பல்மூலம் இறக்குமதி செய்யப் படவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றினை மயிலிட்டி கிராம சபை நிறைவேற்றியுள்ளது.

மயிலிட்டி கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் திரு. இ. இராசதுரை தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எமது பிரதான உணவுப் பொருட்களாகிய அரிசி, சீனி, மா முதலியன திருக்கோணமலையில்இருந்து புகையிரதமூலம் இறக்குமதி செய்யப்படுவதினால் இலங்கையின் ஏனைய பாகங்களிலும்பார்க்க எமது குடாநாட்டு மக்கள் அதிகம் கூடுதலான விலைகொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆகவே இதைத்தவிர்க்கவேண்டும்.

வேறு தீர்மானங்களும் நிறைவேறின.

கடித உறைகள் விற்பனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

தமிழியக்க வாரத்தையொட்டிநேற்று தமிழ் சுலோகங்கள் பொறிக்கப்பட்ட கடித உறைகள் விற்பனை செய்யப்பட்டன. பெருமளவில் கடித உறைகள் விற்பனையாகின. கடித உறை ஒன்று இரண்டு சதவீதம் விற்னை செய்யப்பட்டது.

தமிழிசைச் சங்க இசை விழா

சாவகச்சேரி, திங்கள்

மீசாலை தமிழிசைச் சங்கம் நடாத்தும் இசை விழா நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி நான்கு தினங்கள் தொடர்ந்து நடைபெறும். பல கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறவிருக்கின்றன.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் முதல் நாள் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

திரு. எம். பஞ்சாபிகேசன் குழுவினரின் நாதசுர இசையுடன விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். தமிழிசைச் சங்க மாணவிகள், திருமதி கமலம் மகாலிங்கம், திருவாளர்கள் வி. பரமசாமி, வ. செல்லத்துரை, சி. விநாசித்தம்பி, திருமதி மோகனபிகை கணேசன் ஆகியோரின் பாட்டுக் கச்சேரிகள் நடைபெறவிருக்கின்றன.

விசாரணைசெய்ய உதவி தேவை

கொழும்பு, திங்கள்

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திலுள்ள மோசடி லஞ்ச ஊழல் நிர்வாக சீர்கேடு போன்ற விஷயங்களை ஆராய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் ஒரு வழக்கறிஞரின் உதவியை ஒழுங்கு செய்து தரும்படி கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் பிரதம அதிகாரியான ஒய்வு பெற்ற நீதிபதி திரு. டீ. எச். டீ. எஸ். குணவர்த்தன ஸ்தாபனத்தைக் கேட்டுள்ளார்.

இதையிட்டு முழு தகவல்களையும் விசாரணை செய்வதற்கு மிகவும் கஷ்டமாயிருப்பதாகவும் தான் தனிய இதில் தலையிட்டால் இப்பிரச்னைகளை தீர்க்க அதிக நாட்கள் பிடிக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

ஸ்தாபனத்தையிட்டு வந்த குற்றச் சாட்டுகளை விசாரணை செய்ய கடந்த டிசம்பர் மாதம் உயர்தர அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் இன்று உயர்தர ஆலோசகராக கடமையாற்றுவதோடு கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தை சேர்ந்த சகல தொழிலாளர்களின் சார்பாக விசாரணை செய்து வருகிறார் என அறியப்படுகிறது. திரு. குணவர்த்தனவும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை செய்து வருகிறார்.

இந்த ஸ்தாபனத்தில் சமீப காலமாக லஞ்சம் வாங்கும் அநேகர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாவும், இதில் மிக முக்கியமானது, மீன், துணிகள் சம்பந்தப்பட்டதுதான். இது சம்பந்தமாக அநேக அதிகாரிகள் வேலையினின்றும் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர். லஞ்ச ஊழல் சம்பந்தமாக வர்த்தக மந்திரி திரு. டீ. பி. இலங்கரத்தினா, கடந்த வாரம் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தை திருத்தியமைக்கும் படி கட்டளையிட்டுள்ளார்.

கூட்டுறவு நீதிமன்றங்கள் ஸ்தாபிக்கும் முகமாக கூட்டுறவு நீதியிலிருந்து, பணம் உதவியளிக்க வசதிசெய்ய வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்த நீதிமன்றங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நிறுவப்படும் கூட்டுறவு சங்கங்களில் கையாளப்பட்ட பணங்களை திருப்பிப் பெறுவதற்கும், கூட்டுறவு சங்கங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றங்களையும் லஞ்ச ஊழல்களையும் விரைவாக விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த நீதிமன்றம் உதவி புரியுமெனத் தெரியவருகிறது.

நேடி நடவடிக்கை...

1-ம் பக்கத் தொடர்ச்சி

டத்திற்கு கட்சித்தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமைவகித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுடைய அரசியல், குடியியல், பிரதேச மொழி உரிமைகளை மீட்பதற்கு இனவைய சூழ்நிலையில் பாராளுமன்றத்திற்கு வெளியில் நடாத்தும் சாத்வீக நேரடி நடவடிக்கையைத் தவிர வேறு மார்க்கமில்லை என்ற நம்பிக்கையை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. நேரடி நடவடிக்கை பூர்வாங்கமாக எல்லாம் தமிழ் இயக்கத்தைத் தீவிரமாக நடத்துவதென இச்சபை தீர்மானிக்கிறது. இவ்வியக்கத்தைத் துரிதப்படுத்தி நேரடி நடவடிக்கைக்கான நேரத்தையும், இடத்தையும் குறிப்பிடவும், காலத்திற்குக் காலம் போராட்ட நடவடிக்கையைபொட்டி ஆணைகள் பிறப்பிக்கவும் நடவடிக்கைக் குழுவிற்கு இச்சபை அதிகாரம் வழங்குகிறது.

திருமலையில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஆரம்பிக்கப்படலாமெனத் தெரியவருகிறது.

'எல்லாம் தமிழியக்கம்' இங்கு முறைப்படி ஆரம்பித்து வைக்கப்படாதபோதிலும் தபால், தந்தி முதலியவைகளை தமிழில் அனுப்புவதில் இங்குள்ளவர்கள் சென்ற வாரமே ஆரம்பித்துவிட்டனர்.

'எல்லாம் தமிழியக்கத்தை' யொட்டி தமிழரசுக் கட்சியினர் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரங்களும் சுவரொட்டிகளும் இங்கு விநியோகிக்கப்படுகின்றன.

'பாடசாலையின் வளர்ச்சி'

மாவிட்டபுரம், திங்கள்

'ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது. ஆசிரியர்களின் விடாமுயற்சியும் ஒத்துழைப்பும் பாடசாலையை விரைவில் முன்னேற்றத்திற்குக் கொண்டுவரும்' என்று கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. வ. கந்தையா தமது பாடசாலையிலிருந்து இடமாற்றலாகிச் செல்லும் திரு. க. சபாபதிப்பிள்ளைக்கு நடத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்திற்குத் தலைமைவகித்துப பேசுகையில் கூறினர்.

திரு. சபாபதிப்பிள்ளையின் குணநலத்தைப் பாராட்டித் திருவாளர்கள் அ. வேலாயுதபிள்ளை, கா. சரவணமுத்து, மு. மாணிக்கம், சீ. கனகசபை, நா. ஆறுமுகம், பி. பரமேஸ்வரி ஆகியோரும் பேசினர்.

சங்கங்களின் சுகாதார சேவை

குரும்பசிட்டி, திங்கள்

தொல்புரம் மத்திய சன சமூக நிலையத்தினரும், தொல்புரம் கிராம முன்னேற்றச்சங்கத்தினரும்சுகாதாரப்பரிசோதரின் உதவியுடன் தொல்புரம் கிராமத்தில் வசிக்கும் 3 மாதக் குழந்தைகள் முதல் 8 வயதுக் குழந்தைகள் வரை உள்ளோரின் பெயர்ப் பட்டியலை ஒவ்வோர் வீடுகள் தோறும் சென்று தயாரித்து வருகின்றனர்.

இரு சங்கங்களின் செயலாளர்களும், சுகாதாரப் பரிசோதகர் திரு. சு. சிவப்பிரகாசமும் தொல்புரத்தில் வசிக்கும் சிறுவர்களுக்கு இளம்பிள்ளை வாத நோய் வராது தடுப்பதற்கு ஏற்கனவே கவனம் செலுத்தி வருகின்றனர். இவ்வருடம் ஒவ்வோர் வீடுகளுக்கும் சென்று மருந்து கொடுக்கவும் நிச்சயித்துள்ளனர்.



பறக்கும் பாம்பு

—மகான்—

(11)

கோட்டைமுனைப் பாலத்தைப்பற்றி அறியாதவர்கள் மட்டக்களப்பில் இல்லை என்று தான் சொல்லலாம். மட்டக்களப்புக்குச் சென்றவர்களை, மட்டக்களப்பில் இருப்பவர்களைக் கேட்டுப்பார்த்தால், கோட்டைமுனைப் பாலத்தைப் பற்றிச் சொல்லுவார்கள். கோட்டைமுனைப் பாலத்தின் உருண்டு திரண்ட கம்பிகளுக்கும், அந்தக் கம்பிகளை ஒன்றுடன் ஒன்று இணைக்கவிடாமல் தடுத்து நிற்கும் 'சின்னச்' சுவர்களுக்கும் வாயிருந்தால் எத்தனையோ கதைகளை—ருசிகரமான சம்பவங்களை எடுத்துக்கூறும். கல்லூரி மாணவர்கள் முதல் அரசியல் வாதிகள் வரை இன, மத பேதமின்றி எல்லோருக்கும் இடம்கொடுப்பது இந்த கோட்டைமுனைப் பாலம்தான். நகரின் மத்தியில் இடம்பெற்றிருக்கும் இந்தப் பாலத்தில்தான் அரசியல் திட்டங்களும் வேறு பல திட்டங்களும் உருவாகுவது என்று சொன்னாலும்—இந்த உண்மையை மறுக்க--மறைக்க எவருக்கும் துணிவு வராது என்றுதான் கூறலாம்!

மாலை நேரம் சுமார் ஐந்து மணியிருக்கும். கோட்டைமுனைப் பாலத்தில் வழக்கமாக நின்று 'கதை' பேசுபவர்கள் எவரும் இப்போது இருப்பதில்லை. யாருமற்ற அனாதையாக—வெறிச்சென்று இப்பாலம் காட்சியளிக்கின்றது. பார்ப்பதற்கு பரிதாபகரமாகவிருந்தாலும், கோட்டைமுனைப் பாலத்துக்கு தனது நிலைமை தெரியும். "பறக்கும் பாம்பு" திட்டமும் அதற்குத் தெரியும் என்றுகூட கூறலாம். ஆனால் அதற்கு வாய் எங்கே இருக்கிறது? இருந்தால்தான் கதையாக—நீள் தொடர் கதையாக எல்லா திட்டங்களையும் கூறிவிடுமே!

மாலை நேரத்தில், நாள்முழுதும் தனது கடமையை பலனின்றி செய்துவிட்டு 'வீடு' திரும்பும் சூரியனின் அற்புதமான 'மறைவு' காட்சி, கோட்டைமுனைப் பாலத்தில் இருந்து பார்த்தால் கண்களுக்கும்—கவலை நிறைந்த மனத்துக்கும் நல்விருந்தாகவிருக்கும். மேற்குப் புறத்தில் சூரியன் மறையும்பொழுது காணப்படும் வர்ணக் காட்சியை; ஓவியன்கூட தனது கற்பனையை வடித்து எடுக்கமுடியாத, பல நிறங்கள் ஒன்றுசேர்ந்து நிற்கும் அந்த அற்புதக் காட்சியைக் காண்பதற்கு—கண்டு ரசிப்பதற்கு—கற்பனையில் தேய்ப்பதற்கு இன்று கோட்டைமுனைப் பாலத்தில் எவரும் இல்லை! நகரிலுள்ள பல கடைகள் மூடப்பட்டுவிட்டன. சில கடைகளில் ஒற்றைப் பலகை மட்டும் திறந்திருந்தது. மக்களின் நடமாட்டம் குறையத் தொடங்கியது. ஆனால் தினமும் கடைபெறும் திரைப்படங்களுக்குச் செல்பவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். "வீதியிருந்தால்—பறக்கும் பாம்பினால் தீண்டப்பட்டு மரணமாகவேண்டும் என்று தலை எழுத்து எழுதப்பட்டிருந்தால் சாகவேண்டியதுதான். விதியை யாரால் தடைசெய்ய முடியும்?" என்று நினைப்பவர்கள் படம்பார்க்கச் சென்றார்கள்.

∴ ∴ ∴

ஷகான் வீட்டில் இருக்கும் முருகு, ஏதோ விஷயமாக வெளியில் சென்றுவிட்டு கோட்டைமுனைப் பாலத்தால் சைக்கிளில் வீட்டை நோக்கி—ஷகானின் வீட்டை நோக்கி சென்றுகொண்டிருந்தார். வேறு வீடு எதுவும் கிடைக்காத காரணத்தினாலோ என்னவோ தெரியாது, முருகு ஷகானின் வீட்டில்தான் தங்கவேண்டியிருந்தது. உள்ளத்தில் தெளிவு நிறைந்த ஷகான், எந்தவிதமான எண்ணமும் கொள்ளாமல் முருகுவுக்கு தங்குவதற்கு ஒரு அறையை ஒதுக்கிக்கொடுத்திருந்தார். ஷகான், எந்த விஷயத்தையும் வெளியில் கூறிவிடுவாரே தவிர உள்ளத்தில் ஒழித்து மறைக்கமாட்டார். ஆனால் அப்படி எல்லோரும் இருக்கமுடியுமா? ஆனால் முருகு கூறிய சில விஷயங்கள், ஷகானுக்கு சிறிது, சந்தேகத்தை உண்டாக்கியது. சந்தேகத்தை வளர்க்க—நண்பனின் நட்பை இழக்க ஷகான் விரும்பாவிட்டாலும், முருகுவின் ஒவ்வொரு சொல்லும், செயலும்; முருகுவின் மனதில் ஒழிந்துகிடக்கும் பல திட்டங்களையும் ஷகானுக்குக் காட்டிக்கொடுத்துவிடும்!

மாலை ஆறு மணி இருக்கும். தான் வந்த சயிக்கிளை வெளியிலுள்ள ஒரு மரத்தில் சாத்திவிட்டு, வீட்டுக்குள் நுழைந்தார் முருகு. ஷகான் தனது அறையில் எதைப்பற்றியோ தீவிரமாக சிந்தித்துக்கொண்டிருந்தார். முருகு தனது அறைக்குள் நுழைந்துவிட்டார். அவரின் கையில் ஒரு பெட்டி இருந்தது. அந்தப் பெட்டிக்குள்...? அவரின் உடுப்புகள் இருக்கலாம்? சிறிது நேரத்தின் பின்னர், ஷகானின் அறைக்குள் முருகு நுழைந்தார். திடீரென; கதவில் தட்டாமல் யாரும் உள்ளே நுழைவதை விரும்பாத ஷகான், நண்பன் என்ற கோதாவில் முருகுவிடம் எதையும் அவர் சொல்லவில்லை. ஷகானுக்கு அருகில் இருந்த கதிரையில் முருகு அமர்ந்தார்.

'ஆமாம்...நீங்கள் உங்களது உடுப்பு பெட்டியைக் கொண்டு வந்து விட்டீர்கள்தானே...?" என்று கேட்டார் ஷகான்.

'ஆமாம் ஷகான்...கடையில் வைத்திருந்த உடுப்பு பெட்டியை இப்போது தான் கொண்டுவந்தேன்..." என்றார் முருகு.

"நீங்கள் இன்று வேலைக்குப் போகவில்லையா..." என்று கேட்டார் ஷகான்.

"போகவேண்டும் ஷகான்... இரவு ஒன்பது மணிக்குப் போய் ஒரு மணிக்கு இங்கு வருவேன்..." என்றார் முருகு.

ஷகானின் தலையில் யாரோ சுத்தியலால் அடிப்பதுபோன்ற ஒருவித உணர்ச்சி அவருக்குத் தோன்றியது!

(தொடரும்)

குறள் காட்டும் நெறி

—ஈழத்துச் சிவானந்தன்—

நன்றாகச் சொற்பொழிவு செய்யக்கூடியஒரு இளைஞர் பல மேடைகளில் பேசிவந்தார். உணர்ச்சியும், சொல்லடுக்கும், அலங்காரமும் அவருக்கிருந்ததால் அவர் போன்ற இளைஞர்கள் கரகோஷம் செய்து அவரை ஊக்குவித்தனர். பலரது பாராட்டும் ஊக்கமும் கிடைத்ததால் தலைக்கனம் அவருக்கு ஏற்பட்டுவிட்டது.

பெரியவர்களையும்அவர்களது நல்லியல்புகளையும் வேண்டுமென்றே கண்டித்துப் பகிரங்கமாகப் பேசினார். கல்லூரி ஆசிரியர்களையும், கடமை செய்யும் கண்ணிய சீலர்களையும், கோவில் பிராமணர்களையும், கடவுள் பக்தி கொண்டோரையும் அவர் திட்டிப் பேசாத நாளில்லை.

"பெரியவர்கள் கிழட்டு வேதாந்தக்காரர்கள்,பிற்போக்காளர்கள், அவர்கள் பாடும் பஜகோவிந்தம் பயனற்றது" எண்றெல்லாம் அவ்விளைஞர் கூட்டங்களில் கூச்சல் போடுவதுண்டு. ஒரு நாள் ஏராளமான மக்கள் சூழுமியிருந்த கூட்டமொன்றிற்கு அவ்விளைஞருடன்– அவரைப் போன்ற துடிப்புள்ள வாலிபரொருவரும் சொற்பெருக்காற்றினர் முதலாவதாகப் பேசிய துடிப்புள்ள வாலிபர் தூய தமிழில் சமயம், இலக்கியம் போன்றவற்றைத் தொட்டுப் பேசினர் அடுத்ததாகப் பேச எழுந்த அந்த இளைஞர்; முதல் பேசியவர் கூறிய கருத்துக்களுக்கு வரட்டு வியாக்கியானங்களைக் கொடுத்துப் பேசினர்.

இவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த சபையோருக்குப் பொறுக்க முடியவில்லை. எப்பொழுதும் எவரையாவது திட்டிப் பேசும் அவ்விளைஞரில் ஆத்திரம்கொண்ட சபையினர் எல்லோரும் ஒருசேர எழுந்து சென்றுவிட்டனர். ஐந்து நிமிடங்களால் மக்கள் சூழுமியிருந்த இடம் வெற்றிடமாக மாறியது. பேசிக்கொண்டிருந்த இளைஞரின் முகம் கறுத்துச் சுருங்கியது. கவலையுடன் வீடு சென்றார் அவர். நாவைக் காப்பாற்றுததால் வந்த வினை அவரைச் சுட்டுப் பொசுக்கி வருந்த வைத்தது.

"யாகாவாராயினும் நாகாக்க
காவாக்கால்
சோகாப்பர் சொல்விழுக்கப்
பட்டு

—

எனது கிராமம்

-இ. மேரிமாகிறெற் ராஜம்-
மாதகல்

தமிழ்த்தென்றல் வீசி யாழ்நகரின் அணையா விளக்காக மிளிர்வது "மாதகல்" எனும் கிராமம். நீர்ச்செழிப்பும், நிலச்செழிப்பும் கலந்து நீளிறக் கடலின் அரவணைப்புக்குட்பட்டு விளங்குகின்றது. பச்சைப்பசேலென பயிர்நிலங்களும், நீண்டுயர்ந்த தென்னை, பனை, கமுகு வாழை ஆதியாம் சோலைகளுமுடையது எமது கிராமம். அன்னைபோன்று கடல் அரவணைப்பது ஒரு காட்சி, உள்ளத்தை விட்டு நீங்கா இயற்கை வேறு ஒரு காட்சி.

அநேக அருந்தவப் புலவர்களின் வாழ்க்கை வரலாறுகள் மாதகல் மண்ணிலே மண்டிக் கிடக்கின்றன. அறிவூட்டும் கல்விச்சாலைகளும் பொழுது போக்கின்றி அல்லற்படும் மக்களையும் அரவணைத்து அறிவூட்டும் சனசமூக நிலையங்களும உடையது எம் கிராமம் மயில்வாகனப் புலவரையும், தம்பிமுத்துப் புலவரையும் தரணிக்கே தந்து மங்காபுகழ் கொண்டது மாதையம்பதி. இவர்கள் மண்ணில் மடிந்து விட்டபோதிலும், இளம் எழுத்தாளரையும், தமிழார்வம் கொண்ட இளைஞரையும் தேசசேவையில் பற்றுள்ள பெண்மணிகளையும் ஈன்றெடுத்துத் தன் மடியில் தலாட்டி வருகிறது எமது மாதகல்.

மாரி மழையையும் கோடை வரட்சியையும் கொண்டுள்ளது நம்பதி. பலவிடங்களிலும் பண்படுத்தப்பட்ட வளமான பயிர் நிலங்கள் காட்சியளிக்கின்றன. கமத்தொழிலும், மீன்பிடித்தொழிலுமே இங்குள்ள பிரதான தொழில்கள். இத்தகைய வளம் பொருந்தியதே மாதகற் பதியெனும் நம் கிராமம்.

பொது மேடை

கந்தையா சிதம்பரநாதன், மாதகல்: "மாணவர் மலரில் தொடர்ந்து வரும் பறக்கும் பாம்பு நவீனம் படிக்கப்படிக்க இனிக்கிறது. ஷகானுக்கு எனது பராட்டுதல்கள்."

கி. வை. வாசன், பயித்தோலை, அச்சுவேலி: "பறக்கும் பாம்பு தொடர்கதை பலே ஜோர். ஆசிரியருக்கு எனது பாராட்டுதல்கள். துப்பறியும் பகுதி விரைவில் வெளியிடவும்."

வே. நடராசா, அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கொடிகாமம்: "பறக்கும்பாம்பு விஞ்ஞானத்துக்கு விஞ்ஞான திகைப்பூட்டும் கதை."

ச. பேரானந்தன், வண்ணார் பண்ணை: 'துப்பறியும் கதைகளைப் படிப்பதில் எனக்கு சரியான விருப்பம். பறக்கும் பாம்பை நன்றாகவும், அழகாகவும் விளங்கக்கூடியதாகவும் விறுவிறுப்பாகவும் எழுதிவரும் ஆசிரியருக்கு எனது நன்றி."

க. குணபாலசிங்கம், கொக்குவில் கிழக்கு: "மூளைக்கு வேலை பகுதியை எக்காரணம் கொண்டும் நிறுத்தவேண்டாம். வாராவாரம் வெளியிடவும்"

கே. கணபதிப்பிள்ளை, புற்றளை, புலோலி தெற்கு: "பறக்கும்பாம்பு- பயங்கரமாக, விறுவிறுப்பாக விருக்கிறது. மாணவர்கள் பகுதியில் இதுவரை இப்படியான கதை எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை."

முழு விலாசமின்றி வரும் கடிதங்கள் இப்பகுதியில் இடம் பெறமாட்டா.

மூளைக்கு வேலை

கடந்த வாரம் நான் கேட்ட கேள்வியின் சரியான விடை என்ன தெரியுமா? "அந்தப் புத்திசாலிப் பையன் மரப்பொந்துக்குள் தண்ணீரை ஊற்றினான். பந்து மேலே மிதந்து வந்தது. இலேசாகப் பந்தை எடுத்துவிட்டான்." என்ன கேள்வியின் விடை புரிந்துவிட்டதா?

பின்வருபவர்கள் சரியான விடையை எழுதியிருக்கின்றார்கள். இவர்களுக்கு எனது பாராட்டுதல்கள்.

வ. சரத்சந்திரா, வதிரி; எஸ். வேலாயுதம்பிள்ளை, கந்தர்மடம்; வி. சண்முகராஜா, கோப்பாய்வடக்கு; க. சிவசோதி, சாவகச்சேரி; மா. சண்முகநாதன், சுன்னாகம்; சி. தம்பிஐயா, மயிலணிவடக்கு; மா. தியாகலிங்கவரன், அளவெட்டி; வே நடராசா, கொடிகாமம்; ஏ. சிவலிங்கம், மானிப்பாய்; க. கந்தசாமி, யாழ்ப்பாணம்; அ. கனகசூரியர், ஊரெழுமேற்கு; செ பரமகுரு, நவாலி தெற்கு; க. சீவகாருண்யம், கரம்பன்; வி. சுகதாசன், கஸ்தூரியார்வீதி, திருக்கோணமலை; ஆர். பாலாஜி, சாவகச்சேரி; பொ. நாகேந்திரா, உடுவில் மேற்கு; செ. சிவபாலசுந்தரம், வீமன்காமம்; தருமராணி தருமலிங்கம், யாழ்ப்பாணம்; மா. கனகசபை, கலட்டி; கா. சதானந்தசர்மா, கந்தரோடை; க. சந்திரவர்ணன், உடுவில்; அ. ஆரோக்கியநாதன், சுன்னாகம்; சி. சுந்தரலிங்கம், காங்கேசன்துறை; மா. சுவாமிநாதன், தெல்லிப்பளை; இந்திராணி சொர்ணகாந்தி ஆறுமுகம், பருத்தித்துறை; பா. கணேசன், யாழ்ப்பாணம்; அ. வேதநாயகி, காங்கேசன்துறை; இராணி பவளகாந்தி ஆறுமுகம், பருத்தித்துறை; கந்தையா சிதம்பரநாதன், மாதகல்; சி. ஸ்கந்தமயம், சித்தங்கேணி; இ. மதிவதனி, பொன்னாலை; வே. செல்வவினாயகம், தென்புலோலி; த. மயில்வாகனம், கோப்பாய், இ. இராஜேஸ்வரா, சங்கானை; இரா. கருணாகரன், கோண்டாவில்' இ கமலாதேவி, கோப்பாய்; ரஜனி பிட்டர் நிசநாயகம்; நாரந்தனை தெற்கு; மு. தியாகராசா, கொக்குவில்கிழக்கு; ஐ. முருகையா, சூராவத்தை; மு. சவுந்தரசண்முகநாதன், வட்டுக்கோட்டை; ப. நடேசன், கைதடி; க. திலகவதி, நல்லூர்; அ. சிவலிங்கம், கந்தர்மடம்; சி. இராமநாதன், சங்கத்தானை; ஆ. பொன்னுச்சாமி, தொண்டமனாறு; ந. தெட்சணமூர்த்தி, சித்தன்கேணி; கந்தையா நீலகண்டன்; உடுப்பிட்டி; வ. விமலாதேவி, சாவகச்சேரி; சி. இலக்குவன், வல்வெட்டித்துறை; சி. அம்மாக்குட்டி, பெரியமாவடி; புவனராணி பொன்னையா, சங்கத்தானை; க. குணபாலசிங்கம், கொக்குவில்கிழக்கு; விஜி. பத்மநாதன், கொக்குவில்; சி. கனகரெட்னம், சுன்னாகம்; தி. சபேசன், சுன்னாகம்; ச. குமாரசிங்கம், காங்கேயடி; வை. சச்சிதானந்தசர்மா, காரைநகர்; சி பரஞ்சோதிநாயகி, யாழ்ப்பாணம்; கி. வைரவநாதன், அச்சுவேலி: ஆ. பற்பராஜன், வடலியடைப்பு; தி. இராகநாயகம், பூநகரி; நா. செல்வநாயகம், நவக்கிரி; தம்பிமுத்து பாலசுந்தரம், இளவாலை; மா. செல்வராஜன், கட்டுமடம்; க. சிவஞானம், கொடிகாமம்; சி. சுந்தரலிங்கம், ஊரிக்காடு; சு. தெய்வேந்திரகுமார், நீராவியடி; ச. பேரானந்தன், வண்ணார்பண்ணை.

இவ்வாரக்கேள்வி

மரப்பொந்துக்குள் விழுந்த பந்தை அந்தப் புத்திசாலிப் பையன் எப்படி எடுத்தான் என்பதைக் கண்டுபிடித்துவிட்டீர்கள். இவ்வாரக் கேள்வி என்ன தெரியுமா? "அந்த மரப்பொந்துக்குள் விழுந்த பந்தை வெளியில் எடுத்த அந்தப் புத்திசாலிப் பையன் யார்? அவனின் பெயர் என்ன? என்ன கஷ்டமாக விருக்கிறதா? கவலைப்படாதீர்கள். அந்தப் புத்திசாலிப் பையனின் பெயர் உங்கள் எல்லோருக்கும் தெரியும். உலகத் தலைவர்களில் ஒருவராக அவர் விளங்குகிறார்." என்ன இப்போது ஓரளவு புரிந்துவிட்டதுதானே? சரி உங்களுக்கு விடை தெரிந்தால் எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னர், தபாலட்டையில் மாணவர் மலர், 'ஈழநாடு', த. பெ: 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு உங்களின் விடையை அனுப்பி வையுங்கள். மீண்டும் அடுத்தவாரம் சந்திக்கின்றேன்.

— சாந்தா

'நொக்கவுட்' போட்டி

"யங்லயன்ஸ்" கோஷ்டி சாம்பியனாகத் தெரிவு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் அரியாலை விளையாட்டுக் கழகத்தினர் தமது 44-வது வருடாந்தப் போட்டியை முன்னிட்டு பல விளையாட்டுக் கழகங்களுக்குமிடையே நடாத்திய "நொக்கவுட்" உதைபந்தாட்டப்போட்டியில் "யங்லயன்ஸ்" கோஷ்டி சாம்பியனாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அரியாலை விளையாட்டுக் கழகத்தினர் நடாத்திய பல விளையாட்டுப் போட்டிகளிலும், பல போட்டிகள் தங்களது வீரத்தைக் காட்டின. இவ்வருடச் சாம்பியனாகத் தாங்கள் திகழ வேண்டுமென்று எல்லாக் கோஷ்டியினரும் எதிர்பார்த்தனர். அதுபோலவே இவ் வருடத்தில் நடைபெற்ற போட்டிகளும் பாராட்டத்தக்கனவாக இருந்தன

'சாம்பியனை'த் தெரிவு செய்யப்படவேண்டிய கடைசிப் போட்டியில் "யங்லயன்ஸ்" கோஷ்டியும் "சூட்டிங் ஸ்டார்" கோஷ்டியும் மோதிக்கொண்டன. விளையாட்டு மும்முரமாகவே இருந்தது. இருபக்கத்து கோஷ்டி வீரர்களும் சளைப்புத்தட்டாமல்தான் விளையாடினர்கள். இருந்தபோதிலும் "யங்லயன்ஸ்" கோஷ்டி ஐந்து அதிகப்படியான கோல்களைப் போட்டு "நொக்கவுட்" உதைபந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டிக்கொண்டது.

'நொக்கவுட்' உதைபந்தாட்டப்போட்டியில், 'யங்லயன்ஸ்' கோஷ்டி ஆறு கோல்கள் போட்டது.

"சூட்டிங் ஸ்டார்" கோஷ்டியினர் ஒரு கோலே போட முடிந்தது. "யங்லயன்ஸ்" கோஷ்டி காப்டன் தேவராசா இரண்டு கோல்களைப் போட்டார். அன்ரனி, பத்மநாதன், பத்மலிங்கம் ஆகியோர் முறையே 2, 1, 1 கோல்களைப் போட்டு, "யங்லயன்ஸ்" கோஷ்டி சாம்பியனாகத் திகழ வழிசெய்தனர்.

சிற்ப ஓவிய பகுதி கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ் பிரதேச சிற்ப ஓவியப் பகுதிக்கோஷ்டிக்கும் புனிதவளன் கழகக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்ற மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் சிற்ப ஓவியப் பகுதியினர் 2 ரன்களாலும் 1 விக்கட்டாலும் வெற்றிபெற்றனர்.

சிற்ப ஓவியப் பகுதிக் கோஷ்டியினர் முதல் ஆட்டத்தில் 60 ஓட்டங்களும் இரண்டாம் ஆட்டத்தில் 9 விக்கட் நஷ்டத்துக்கு 40 ஓட்டங்களும் பெற்றனர். இதில் முதல் ஆட்டத்தில் சிற்ப ஓவியப் பகுதி வீரர் பட்சோ 27 ஓட்டங்களையும் காப்டன் சந்திரன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

புனிதவளன் கோஷ்டியினர் முதல் ஆட்டத்தில் 46 ஓட்டங்களையும் இரண்டாம் ஆட்டத்தில் 52 ஓட்டங்களையும் பெற்றனர். ஆட்ட முடிவில் சிற்ப ஓவியப் பகுதி துடுப்பெடுத்தாடி ஆட்டத்தில் வெற்றிபெற்றனர்.

இறுதியில் சிற்ப ஓவிய பகுதி கோஷ்டியைச் சேர்ந்த நாயகம் நன்முக துடுப்பெடுத்தாடி ஆட்டத்தை இழக்காமல் 10 ரன்கள் எடுத்து சிற்ப ஓவியப் பகுதிக்கு வெற்றியை எடுத்துக் கொடுத்தார்.

உபஜனாதிபதிக்கு "டாக்டர்" பட்டம்

கெய்ரோ, ஏப். 7

கெய்ரோ பல்கலைக் கழகம் இந்திய உபஜனாதிபதி டாக்டர் ஸகீர்ஹுஸைய்னுக்கு "டாக்டர் ஆப்லா" என்ற கௌரவப் பட்டத்தை வழங்கியது.

வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய், 9-4-63

கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இன்னிசையரங்கம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 விவேகச் சக்கரம் — 1, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 "தொட்டதெல்லாம் பொன்"-4 ... உரைச்சித்திரம், 9-45 பி. கோவிந்தராஜா — நாகஸ்வரம்.

திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 1-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 பி. ஆர். காசிவிசுவநாதன் — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 பி. ஆர். காசி விசுவநாதன் — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 நிறைவாழ்வு — பேச்சு, 7-46 டி. எம். சௌந்தரராஜன் — பாட்டு, 8-45 ரயில்வே வாரம் — பேச்சு, 9-15 முத்து முத்தாக வளரவேணும் — நாட்டுப் பாடல் தொகுப்பு நிகழ்ச்சி, 9-30 கல்யாணப்பரிசுகள் — நாடகம், 9-45 கவிச்சொல் கேளீர், 9-55 வாத்தியஇசை.

'தமிழ் மொழியில் வழிபாடு'

திருமலை, திங்கள்

"ஆலயங்களில் வடமொழியுடன் தமிழ் மொழியிலும் அர்ச்சனை நடைபெறுவதற்கு நான் எதிர்ப்பில்லை. அடியார்கள் உள்ளம் ஈடுபடக்கூடிய முறையில் தமிழிலும் அர்ச்சனை செய்வதே சிறப்புடையது. திருப்பெருந் திரு. குன்றக்குடி அடிகளார் தமிழ் மொழி மலர்வழிபாட்டை வற்புறுத்துவது வடமொழி மேற்கொண்டுள்ள வெறுப்பினலன்று. வழிபடுவோரின் உள்ளம் ஈடுபடுதல் வேண்டும் என்னும் அவாவினல் தான் குன்றக்குடி அடிகளார் தமிழ்மலர் வழிபாடுதனை வலியுறுத்துகின்றார்."

இவ்வாறு நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் "ஆலயதரிசனம்" எனும் பொருள் பற்றி இந்துக்கல்லூரியில் நேற்றையதினம் நிகழ்த்திய விரிவுரையில் கூறினர்.

திரு. பெ. கணநாதபிள்ளை கூட்டத்திற்கு தலைமை தாங்கினர்.

முற்போக்கு எழுத்தாளர் மகாநாடு

கொழும்பு, திங்கள்

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மே 7, 8ந் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் சங்கத்தின் 2வது தேசிய மகாநாட்டில் கலந்து கொள்ள பல நாடுகளின் எழுத்தாளர் சங்கங்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்தியா, பர்மா இந்தோனேஷியா, ஐ. அ. கு, சோவியத் யூனியன், சீனு மற்றும் நாடுகளின் எழுத்தாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் அழைக்கப் பட்டுள்ளனர். ஆசிய—ஆபிரிக்க எழுத்தாளர்களின் சர்வதேசிய தலைமைக் காரியாலயத்தின் பிரதிநிதிகளும் இம் மகாநாட்டில் கலந்து கொள்ளுவார்கள்.

தமிழ் நாட்டிலுள்ள எழுத்தாளர் சங்கங்களுக்கு அழைப்புகள் அனுப்பப் பட்டுள்ளதுடன், கவிஞர் கண்ணதாசனுக்கும், பிரபல விமர்சகரும் எழுத்தாளருமான சிதம்பர ரகுநாதனுக்கும் விசேஷ அழைப்புகள் அனுப்பப் பட்டுள்ளன.

மகா நாட்டு ஆரம்பத்தில் பாரதியின் ஞான குருவான யாழ்ப்பாணத்துச் சுவாமியாரின் ஞாபகார்த்தத்திற்கு அஞ்சலி செய்யுமுகமாக சமாதியில் நடைபெறும் வைபவத்தில் மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் அவர்கள் சாமியாரின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பார்.

முதல் நாள் விழா பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் தலைமையில் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடை பெறும்.

யூகோவின் புதிய அரசியல் திட்டம்

பெல்கிரேட், ஏப். 8

யூகோஸ்லேவியாவின் புதிய அரசியல் திட்டத்தை யூகோஸ்லேவிய பார்லிமெண்ட் நேற்று அங்கீகரித்தது.

"பண்டாரநாயக்கா கொலைவழக்க

குற்றவாளிகளின் தண்டனை குறைக்கப்படக் கூடாது"

—உள்நாட்டமைச்சு

கொழும்புபு, திங்கள்

காலம் சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட கைதிகளுக்கு, குற்ற மன்னிப்போ அல்லது அவர்களது தண்டனையைக் குறைக்கும் நடவடிக்கையையோ மேற்கொள்ளக்கூடாதென்று உள்நாட்டமைச்சு சிறைச்சாலைப்பகுதிக்குத் தெரிவித்துள்ளது.

உள்நாட்டமைச்சு மேற்கொண்ட நடவடிக்கையிலிருந்து, காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு தற்பொழுது ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் மாபிட்டிகம புததரகித்த, எச். பி. ஜயவர்த்தனு ஆகியோரின் சிறைத் தண்டனை குறைக்கப்படமாட்டாதெனத் தெரிய வருகிறது.

இதுசம்பந்தமாக, உள்நாட்டமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

"நீண்டகாலம் சிறைத் தண்டனை அனுபவிக்கும் சிறைக் கைதிகளின் சிறைக்காலம் குறைக்கப்பட்டுவருவது வழக்கம். நீண்ட காலம் சிறைத் தண்டனை பெற்ற ஒரு கைதியின் சிறைக்காலத்தில், வருடத்துக்கு ஒரு மாத வீதம் குறைக்கப்பட்டு, குற்ற மன்னிப்பு அளிக்கப்படுகிறது. ஒரு சிறைக் கைதிக்கு ஆயுள் தண்டனை கிடைத்தால், அவர் இருபது வருடகாலத்துக்குள் விடுதலை பெறுகிறார். ஆனல் பெரும் வழக்குகளில் சம்பந்தப்பட்ட அதாவது காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா கொலை வழக்குகளின்போன் வற்றில் சம்பந்தப்பட்டவர்களுக்கு குற்ற மன்னிப்பு அளிக்கப்படக் கூடாது."

பண்டாரநாயக்கா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு, தற்பொழுது ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் புத்தரகித்தா, வெலிக்கடைச் சிறைச்சாலையில் மதத்துறைக்குப் பொறுப்பாகக் கடமையாற்றுகின்றார். எச். பி. ஜயவர்த்தனு கண்டியிலுள்ள போகம்பரைச் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்துவருகிறார்.

கவலையினத்தால் நோயாளர் மரணம்

கம்பஹா, திங்கள்

'ஆஸ்பத்திரி பணியாளர்களின் கவலையினத்தால் தான் நோயாளர் மரணமானர் என்றே நான் அபிபிராயப் படுக்றேன், என்று மடல் கழுவ என்ற இடத்தைச் சேர்ந்த ஆர். கே. அந்திறிஸ் அப்புகாமி என்பவரின் மரணம் குறித்து நடை பெற்ற விசாரணையில் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எம். டி. சி. விஜயசூரியா கூறினர்.

அந்திறிஸ் அப்புஹாமி ஆஸ்பத்திரியிலுள்ள நீராடும் அறைக்குச் சென்றுரென்றும் அங்கு இறந்து கிடக்கக் காணப்பட்டாரென்றும், அவர் இறந்த சம்பவம் யாருக்கு உடனடியாகத் தெரியாதென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது

"இலங்கையின் புதியசட்டம் இந்திய வம்சாவளியினரைப் பாதிக்கும்"

லோகசபையில் திருதிம மேனன்

புதுடில்லி, ஏப். 8

இலங்கை அரசாங்கம் 'வேலை அனுமதி முறை' சம்பந்தமாகக் கொண்டுவந்துள்ள புதிய சட்டத்தினால் இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளைப் பாதிக்காதவகையில் அரசாங்கம் கவனித்துக்கொள்ளும் என்று இந்திய உதவி ராஜாங்க மந்திரி திருமதி லட்சுமி மேனன் இன்று லோகசபையில் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கத்துடன் இது விஷயம் குறித்து இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் இடையருது தொடர்பு கொண்டுள்ளார் என்று திருமதி மேனன் தெரிவித்தார்.

இலங்கையில் தோட்டங்களிலும் அரசாங்க, தனியார் துறைகளிலும் இலங்கையரல்லாதவரை வேலைக்கமர்த்துவதில்லையென்ற இப் புதிய நடவடிக்கையினால் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரில் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்றும் திருமதி மேனன் கூறினர்.

இந்தியாவின் ராணுவ பலம் இரட்டிப்பாகும்

2 ஆண்டில் சாதிக்கவிருப்பதாய் திரு. சாவன் அறிவிப்பு

புதுடில்லி, ஏப்ரல் 8

நடப்பு ஆண்டுக்கு இந்தியாவின் பாதுகாப்புச் செலவுக்கு 467,00,00,000 ரூபாவை லோகசபை இன்று அங்கீகரித்தது. அப்போது பாதுகாப்பு மந்திரி திரு. சாவன் பேசுகையில் அடுத்த 2 ஆண்டுகளில் இந்தியாவின் ராணுவபலம் இரட்டிப்பாக்கப்படும் எனக் கூறினர்.

ஒவ்வொரு ஆண்டும் பாதுகாப்புச் செலவு இதேபோல் பெருந்தொகையாய் இருக்குமென்றும், இது முயற்சியின் ஆரம்பமே என்றும் அவர் கூறினர்.

இந்தியாவை எவரும் தாக்குமுன், பன்முறை யோசிக்கவேண்டிய நிலைக்கு நாட்டின் பலம் பெருக்கப்படும் என்றும், புதிதாக 6 படைசாதன தொழிற்சாலைகள் அமைக்கப்படவிருப்பதாகவும் திரு. சாவன் கூறினர்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் உதவிபற்றியும் பாதுகாப்பு மந்திரி குறிப்பிட்டார்.

திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் அமெரிக்கவிஜயம்வெற்றி பெற்றுள்ளது. இந்தியா மீது திடீர்த் தாக்குதலை எதிர்ப்பதில் துணை செய்யப் பலமானவிமான அணி இருக்கும் என்றும், நேபா தாக்குதலிலிருந்து இந்தியா நன்கு படிப்பினை கற்றிருக்கிறதென்றும் அவர் கூறினர்.

லக்னோவில் மத்திய பிராந்திய ராணுவத் தலைமை அமைக்கப்படும் என்றும், கல்கத்தாவில் கிழக்கு பிராந்திய தலைமை அமைக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

——

சன சமூக நிலைய விசேஷ கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட சன சமூக நிலையங்களின் விசேஷ கூட்டம் நாவலர் பாடசாலையில் சமாஜத் தலைவர் இராசவாசல் முதலியார் சி. தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சன சமூக நிலையங்களுக்கு கடந்த இரு வருடங்களாக அரசினர் நன்கொடைப் பணஉதவி வழங்கப்படாமை பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

திரு. தியாகராஜா பேசுகையில் சன சமூக நிலைய இயக்கம் இந்நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானது என்று குறிப்பிட்டார்.

மாநகர சபைக் கமிஷனர் திரு. டி. டி. ஜயசிங்கா சமாஜச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் உட்பட பலர் பேசினர்.

'யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல சன சமூக நிலையங்களுக்கும் முன்னர் வழங்கப்பட்டதுபோல தொடர்ந்து நன்கொடை உதவி வழங்குமாறு உள்ளூராட்சி அமைச்சர் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாவற்குளம் பெயர் மாற்ற யோசனை

நாமல்வாவனமாறலாம்

திருகோணமலை, திங்கள்

நகரங்களினதும் கிராமங்களினதும் பெயர்களை மாற்றுவதற்குரிய ஆலோசனைக் குழுவிடம் திருகோணமலைக் கிராமங்களின் பெயர்களை மாற்றுவதற்குரிய யோசனைகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

திருமலையிலுள்ள, கட்டிக்குளம் பத்துமேற்கு, மேதவச்சி அடம்பன், புலிகண்டிக்குளம், (கொலனி) குட்டிகுளம், நாவற்குளம், நீராவெளி, கந்தளாய் ஆகிய கிராமங்களுக்கு முறையே வத்தகிரவா பந்திபலாத்த, மேதபுற, மெதலிலவில, கிரிந்தபுற, சம்முத்திவாவ, நாமல்வாவ, மிகிறிவாவா, கந்தளாவா, எனப் பெயரிடும் படி ஆலோசனைகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

——

வேலணை கொலை வழக்கு

சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

ஊர்காவற்றுறை, திங்கள்

வேலணை மேற்கு வாசியான முருகேசு சின்னத்தம்பியைக் கொலை செய்ததாக அதே ஊரைச் சேர்ந்த கந்தையா சண்முகராசா மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை பொலிஸ் நீதிமன்றத்தில் சென்ற வாரம் மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இவ்வழக்கு சுப்ரீம்கோர்ட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டதாக நீதிபதி தெரிவித்தார்.

——

உப தேர்தலில் காங்கிரஸ் வெற்றி

புதுடில்லி, ஏப்ரல் 8

மேற்கு வங்கத்தில் நடைபெற்ற இரு உபதேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

——

டீன்ரஸ்க் டில்லிவருவார்

புதுடில்லி, ஏப்ரல் 8

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு டீன்ரஸ்க் வருகிற மே மாதம் 2-ம் திகதி புதுடில்லி வருகிறார்.

ஆனந்தனுக்கு முஸ்லிம் மக்கள் வரவேற்பு

யாழ்ப்பாணம், திங்கள்

நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு முஸ்லிம் மக்கள் சார்பில் குவாஸி எம். எம். சுல்தான் தலைமையில் ஒஸ்மானியாக் கல்லூரியில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஒவ்வொரு வாலிபரும் ஆனந்தனைப்போல துணிவும், ஆர்வமும், விடாமுயற்சியும் உடையவராக விளங்க வேண்டும் என்று காதி சுல்தான் கூறினர்.

கிராமாதிகாரி எஸ். ஏ. ரஹீன் பேசுகையில் ஆனந்தன் நிச்சயமாக ஆங்கிலக்கால்வாயை கடந்தே தீருவார் எனக் கூறி இவ்வீரனை வரவேற்பதால் முஸ்லிம் சமுதாயமே பெருமையடைகிறது என்று கூறினர்.

ஜனப். இளங்கீரன் பேசுகையில் ஆனந்தன் நிகழ்நாட்டிய உலக சாதனை இலங்கையின் புகழை உலகுக்கு எடுத்துக்காட்டிவிட்டது. இது தமிழ் பேசும் மக்களுக்கே பெருமையளிக்கிறது என்று குறிப்பிட்டார்.

இலங்கை சர்வகலாசாலை எம். பி. எம். ஜலீல் முஸ்லிம் மக்கள் சார்பில் ஆனந்தனுக்கு அன்பளிப்புச் செய்து ஆனந்தன் கடலில் 42 மணி நேரம் கடலில் நீந்திக்கொண்டிருந்ததே உலகில் ஒருவரும் இதுவரை செய்யாத மகத்தான சாதனை என்று குறிப்பிட்டார். சர்வகலாசாலை ஏ. எச். மஃரூப் வரவேற்பு பத்திரம் வாசித்தளித்தார்.

மற்றும் ஜனப். எம். தூர் முகம்மது ஜனப். எம். ரஸாக் ஆசிரியர், செல்வன் டுபீன் காதர் ஆகியோரும் பேசினர்கள். ஆனந்தன் பாட்டுகள் பாடினர். சர்வகலாசாலை எம். எஸ். ஜமால் நன்றியுரை கூறினர்.

——

2-வது சிமிந்தி தொழிற்சாலை

புத்தளம், ஏப். 8

புத்தளத்தில் 2-வது சிமிந்தி தொழிற்சாலைக்கான வேலைகள் ஆரம்பமாகியுள்ளன. வருடம் 4 லட்சம் டன் சிமிந்தியை உற்பத்தி செய்யும் இத் தொழிற்சாலை ரூ. 8.08 லட்சம் செலவில் அமைக்கப்படுகிறது.

——

பாஸ்கெட் பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் 'பாஸ்கட்' பந்தாட்டச் சங்கத்தாரால் நடத்தப்பட்ட சுற்றுப்போட்டியில் வெற்றியீட்டிய கோஷ்டிகளுக்கு யாழ்ப்பாண பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஜே. வரன்சன்ஸ்டால் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இப்பரிசளிப்பு விழா வைபவம் நடைபெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் கலந்துகொண்ட கோஷ்டிகளில் மேற்பிரிவில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியும், கீழ்ப் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் முதலிடத்தை பெற்று வெள்ளிக்கிண்ணங்களை சுவீகரித்தன. மேற்பிரிவிலும் கீழ்பிரிவிலும் இரண்டாவது இடம் பெற்ற முறையே வட்டுக்கோட்டை பட்டதாரிகள் கோஷ்டிக்கும், யாழ். சம்பத்தாசிரியர் கல்லூரிக் கோஷ்டிக்கும் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன.

——

சீனிக்கு அவசர வேண்டுகோள்

கொழும்பு, திங்கள்

மெக்சிக்கன் வர்த்தக தூதுகுழுவிடம் இலங்கைக்கு சீனி தந்துதவும்படி இலங்கை அரசாங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. மெக்சிக்கன் வர்த்தக தூதுக்குழு இப்பொழுது இலங்கை வந்திருக்கின்றது.

"எம். பி. க்களுக்கு பென்ஷன் கூடாது"

— ஒரு எம். பி.

கொழும்பு, திங்கள்

நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடியில் 'மேன்மை தங்கிய' பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்கு பென்ஷன் வழங்கவேண்டுமென்ற யோசனை நாட்டின் பாராளுமன்ற சம்பிரதாயத்தை ஏளனம் செய்வதுபோலாகும்" என்று பொறுப்பு எம். பி. திரு. டபிள்யு. டி. டி. டி'சில்வா தெரிவித்துள்ளார்.

——

வித்தியாசாலையை மாற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

கட்டுவன் பாலர் ஞாஜேதய வித்தியாசாலையை கட்டுவன் மயிலிட்டி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்திற்கு மாற்றித் தரும்படி பாலர் ஞாஜேதய சங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

——

பாம்புக்கடி நிபுணருக்கு உதவிப் பணம்

கொழும்பு, திங்கள்

பிரபல பாம்புகடி வைத்திய நிபுணர் திரு. எம். ஜி. ஏ. மெரேஸ் என்பவருக்கு வருடம் ஒன்றுக்கு ஆறுயிரம் ரூபா உதவிப்பணம் வழங்கப்படும். திரு. மெரேஸிற்கு உதவிப்பணம் அளிப்பதற்கு மந்திரிசபை அங்கீகரித்துள்ளது.

திருப்பணி வேலைகள் ஆரம்பம்

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதியிலே கதிர்வேற் பிரதிஷ்டையுடன் நிலைபெற்ற மிகப் பழமைவாய்ந்த சரவணீ ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத் திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

நெடுந்தீவில் 7 பேர் கைது

ஊர்காவற்றுறை, திங்கள்

சட்டவிரோதமாகக் குடியேறியதாக ஊர்காவற்றுறை பொலிசார் ஏழு பேரை நெடுந்தீவில் வைத்துக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 8, 10 வயதுடைய பையன்கள் இருவரும் காணப்பட்டனர். இவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதற்கு ஏற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புத்தாண்டின் புனித விருந்து!

மக்கள் கண்குளிர இதயம் மகிழவருகிறது

கிங்ஸ்லி ஸிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்)(மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சபாஸ் சந்திரபாபு என.....

நாடும் ஏடும் வாழ்த்துகிறது

நடிப்புலகம் போற்றுகிறது

காணத்தயாராகுங்கள்

★ சந்திரபாபு,
★ எம். என். ராஜம்
★ டி. எஸ். பாலையா
★ கே. சூரியகலா
★ ரி.எஸ்.துரைராஜ்
★ பி. எஸ். ஞானம்
★ ஜாவர்சீதாராமன்
சி டி. ராஜகாந்தம்
★கள்ளபார்ட் நடராஜ்

மற்றும் பலர் நடித்த

சிவகாமி பிக்சர்ஸ்

குமார ராஜா

திரைக்கதை—வசனம் முரசொலிமாறன் எம்: ஏ.

இசை டைரக்ஷன் டி.ஆர். பாப்பா ஜி கே. ராமு

நடனம் சாயி, சுப்புலட்சுமி, ஹெலன்

பின்னணி வி. என். சுந்தரம், பி. லீலா, ஜமுனாராணி, ரத்தினமாலா, சூலமங்கலம் ராஜலட்சுமி, ரேணுகா, கஜலட்சுமி

4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி ஸிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு

மற்றும் 5 திரைகளில்

சிவாஜி கணேசன் சாவித்திரி

மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்!

மனோகரா

(யாழ்ப்பாணம்)

சிவாஜி – ஜெமினி - சாவித்திரி—சரோஜாதேவி

நடித்த

பார்த்தால் பசிதீரும்

தமிழ்பேசும் படம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 9-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.